



கல்கி
ALKI 23-6-1974 50 காசு


இவளுக்குத் தெரியும்
குங்கும திலகங்களிலே
இணையிலா அழகு திலகம் சிங்கார்...
எங்கெங்கும் கிடைக்கும்
உங்களுக்குத் தெரியுமா—பாரத நாட்டின்
பேரழகு திலகமான சிங்கார் எந்த உடைக்கும்
உளகிலேக்கும் பொருந்துமாறு சொக்குமழகுள்ள
பலவிதமான சாயல்களில் உருவாக்கப்படுகிறது.
மென்மைய மெருகுடனே, மின்னும் மெருகுடனே...
சிந்தூரப் பொடி உண்டு. சாந்தும் உண்டு.
Shingar
சிங்கார்— பாரத நாட்டின் உச்ச விற்பனையுடைய,
பரிபூரண நம்பிக்கைக்குரிய குங்குமப் பொட்டு.
தயாரிப்பாளர்கள்: பாரமவுண்ட் பிராடக்ட்ஸ், பம்பாய்-400 004.
விநியோகஸ்தர்கள்:- முல்லர் & ஃபிப்ஸ் (இந்தியா) லிட்.
Shingar
DELUXE
Shingar
everest/858/SH tm






எழில் மிகு பாரதம்



1. காஷ்மீரில் மீன் பிடிப்பவர். 2. காசி. 3. சித்தோர்கார் வெற்றிக் கோபுரம். 4. புத்தகயா. 5. பத்தேபூர் சிக்ரி. 6. பண்டைக்காலத்திலேயே பல்கலைக் கழகம் நிறுவிய நாளந்தாவின் இன்றைய தோற்றம். 7. கேரளம். 8. மைசூர் 'ஜோக்' அருவி. 9. பெரியாறு வனவிலங்குகள் சரணாலயம். 10. சரவண பெலகோலா கோமதீஸ்வரர். 11. மைசூர் சாமுண்டி குன்றின்மீது பிரும்மாண்ட நந்தி.
படங்கள் உதவி: மத்திய செய்தி இலாகா



Love Story



Focus.SC.762(a)

Madras and the Connemara.

It's a historic love affair, and the bond is now stronger than ever before!

Madras always had a soft corner for the Connemara — in its heart! Today, the Connemara is very much a part of the changing Madras scene, as it had been from the turn of this century.

Re-discover the 'new' Connemara. It's a magnificent world, with many new facilities: The Chola Bar. The Kolam Restaurant. The Dolphin Pool. The Grand Staircase with the exquisite antique wood carvings from another era. The colourful Lobby, the refurnished rooms in the old wing, the ultra-luxurious rooms in the new wing. Direct dialling telephone service in every room and the Instant Reservation Service for bookings at the other Spencer's Hotels — The West End, Bangalore and The Savoy, Ooty.

Indeed, it's a Love Story. Not only of a hotel and a city. But also of a hotel and its countless guests. Come to the Connemara... and fall in love with a great hotel.

Connemara Hotel

Madras-600002.


Other Spencer's Hotels:
The West End, Bangalore
The Savoy, Ootacamund.

The Connemara — a legacy of a century of Spencer's expertise.

கல்கி

ஆனந்த, ஆனி 9
ஜூன் 28, 1974





□ □ □ □ □ □ □

இந்த இதழில்....

சுற்றுலா சிறப்பிதழ் என்று யோசனை தெரிவிக்கப்பட்டதுமே இதோ நான் கிளம்புகிறேன், ''நந்தி ஹில்ஸ்''க்கு என்று கூறி அங்கவஸ்திரத்தை உதறிப் போட்டுக் கொண்டு புறப்பட்டுவிட்டார் நமது உதவி ஆசிரியர் திரு எஸ். வி. எஸ். அப்புறம் அவர் ரயில் ஸ்ட்ரைக்கில் சிக்கித் திண்டாடித் தவித்துத் திரும்பியது ஒரு தனிக் கதை!

இன்னும் முன்னாலேயே வெளியாகியிருக்க வேண்டிய இந்தச் சுற்றுலா சிறப்பிதழ் ரயில்வே வேலைநிறுத்தத்தின் போது வெளிவருவது இங்கிதக் குறைவு என்று நாங்கள் கருதியதால் சற்றுக் காலதாமதமாக உங்கள் கரங்களை அலங்கரிக்கிறது. காலதாமதம் இதழுக்கு மெருகேற்றவும் உதவியது.

பயனுள்ள கட்டுரைகளுடன் பல் வலிக்கச் சிரிக்கவும் விஷயங்கள் உள்ளன. கதைகளுக்கும் குறைவில்லை. உங்கள் கருத்தையும் தெரிவியுங்கள். நன்றி.

—ஆசிரியர்



S. R. V. S. லிமிடெட், டைரக்டர் ஸ்ரீ K.A.V. ஈஸ்வரன் அவர்கள் குமாரத்தி சௌ. சீதாலெட்சுமி M. Sc. க்கும், கொச்சின் ஸ்ரீ K. S. வைத்திலிங்கம் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி K.V. கிருஷ்ண மூர்த்தி M. Sc. க்கும், சென்னையில் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும், மாலையில் நடைபெற்ற வரவேற்புக்கும், உறவினர்களும், நண்பர்களும் நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்!



சென்னை, மதராஸ் அட்வர்டைஸிங் கம்பெனியின் டைரக்டரும், ஜெனரல் மானேஜருமான ஸ்ரீ கே. ஜெயராமன் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி சாந்தலெட்சுமிக்கும் சிரஞ்சீவி ஆர். சிவகுமாருக்கும் சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்!

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 47

ஐந்தாவது வல்லரசு ஆட்டம் காண்கிறது!

'இந்த உலகத்தின் ஐந்தாவது வல்லரசு' என்று பத்திரிகைத் துறையை வர்ணித்தான் நெப்போலியன்.

ஜனநாயகத்திலோ பத்திரிகைகளின் முக்கியத்துவத்தை எவ்வளவு உயர்த்தி மதிப்பிட்டாலும் போதாது. ஜனநாயகத்தின் ஜீவனே பத்திரிகைகள்தாம்.

அத்தகைய ஓர் அத்தியாவசியத் துறைக்கு இப்போது ஆபத்து வந்திருக்கிறது. பெரிய அளவில் பயங்கரமான விதத்தில் அபாயம் தோன்றியிருக்கிறது. பத்திரிகைத் துறையின் கச்சாப் பொருளான காகித இறக்குமதியைக் குறைத்திருக்கிறது அரசு. ஐந்து சதமல்ல, பத்து சதமல்ல; தயவு தாட்சண்யமின்றி நாற்பது சதம் வெட்டியிருக்கிறது!

விளைவுகள் மிகவும் கவலை அளிப்பவை. பல பத்திரிகைகள் வாரம் ஒரு நாள் பிரசுரமாவதில்லை. இதனால் விற்பனை வருவாயும் போகிறது; விளம்பர வருவாயும் போகிறது. இதர ஆறு நாட்களில் பிரசுரமாகும் பத்திரிகையின் பக்கங்களும் குறைகின்றன. இதனாலும் விளம்பர வருவாய் பெருமளவு பாதிக்கப்படுகிறது. விளம்பர வருவாயின்றி எந்தப் பத்திரிகையும் வாழ முடியாது. நஷ்டம் காரணமாகப் பல பத்திரிகைகள் மூடப்பட வேண்டிய கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

பத்திரிகைக் காகித இறக்குமதி வெட்டுக்குக் காரணம், போதிய அளவு காகிதம் உலகச் சந்தையில் கிடைக்காதது தான் என்கிறது அரசு. இது ஓரளவுக்கு மட்டுமே உண்மை. முன்பு அந்தந்தப் பத்திரிகையாளர்களும் தாங்களே தங்கள் தேவைக்கு ஏற்பப் பத்திரிகைக் காகிதம் வரவழைத்துக் கொண்டிருந்தனர். ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி இந்நிலையை மாற்றி இறக்குமதிப் பொறுப்பை அரசாங்க வர்த்தக நிறுவனத்திடம் (எஸ்.டி.ஸி.) ஒப்படைத்தது அரசு. அந்நிறுவனம் கேசம் ஏற்றுமதி முதல் போட்டார் கார் ஏலம்வரை சகலத்திலும் தலையை நுழைத்துக் கொண்டு எதையும் சரிவரச் செய்யாமல், விட்டும் கொடுக்காமல், தலைவலியைத் தந்து கொண்டிருக்கிறது. பத்திரிகைகளின் தேவைகளை முன்கூட்டியே கணிக்கவோ அதற்கேற்ப 'ஆர்டர்'கள் கொடுக்கவோ அதனால் முடியாது.

எனவே இந்தப் பொறுப்பைப் பத்திரிகைப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவிடமே ஒப்படைத்துவிட வேண்டும். பத்திரிகைக் காகித உற்பத்தியாளரிடம் பத்திரிகையாளர்களே தொடர்பு கொள்வதால் சுமுகச் சூழலும் காரிய சித்தியும் ஏற்படும்.

வெட்டுக்கு இன்னொரு காரணம் அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தலாம் என்பதாகும். மக்களுக்கு உணவில்லை என்றால் அந்நியச் செலாவணி கணக்குப் பார்ப்போமா? ஜனநாயகத்தைப் பட்டினி போட்டு வதைக்கக் கூடாதென்றால் இதிலும் அந்தக் கணக்குப் பார்க்கக் கூடாது. இப்போதும்கூட அந்நியச் செலாவணி மிச்சம் பிடிப்பதில் அரசு அப்படியொன்றும் சாமர்த்தியமாக இயங்கிவிடவில்லை. 'நட்பு' நாடான ருஷ்யாவிடம் பத்திரிகைக் காகிதம் வாங்குவதாகக் கூறி டன் ஒன்றுக்கு ரூ. 4200 அழுகிறது. கனடாவிலிருந்து வாங்கும் காகிதத்தின் விலையோ டன் ஒன்றுக்கு ரூ. 2848தான்!

பத்திரிகைக் காகிதத்தைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்யும் ஆற்றல் நமக்கில்லை. அதோடு 'நியூஸ் பிரின்ட்' உற்பத்திக்கு ஏற்ற மரங்கள் வளரக்கூடிய சீதோஷ்ண நிலையுள்ள பிரதேசங்களும் நமது நாட்டில் மிகக் குறைவு. எனவே பல்லாண்டுகளாக இறக்குமதி செய்து வந்தது போலவே எதிர்காலத்திலும் இறக்குமதி செய்தாக வேண்டிய நிலையில்தான் இருப்போம். பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப அதிக அளவிலும் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும்.

ஏற்றுமதிக்கு உகந்த பொருள்களின் உற்பத்தியை இங்கு அதிகரிக்க வேண்டுமேயன்றிப் பத்திரிகைக் காகிதத்தின் இறக்குமதியைக் குறைத்தால் சித்திரம் வாங்கக் கண்களைக் கொடுத்த கதையாக முடியும்.

என்ன சேதி ?

இங்கிதக் குறைவு !

மகாராசாதி ராச, ராச டார்த்தாண்ட, ராச கம்பீர, ராச கோலாகல, திரிபுவன சக்கரவர்த்தி, கரிகால் வளவர், கருணாநிதிச் சோழர், டாக்டர் கலைஞர் தமிழக முதல்வரின் பிறந்த நாளை உத்தேசித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை ஆபாசம் என்று சொல்ல முடியாது போனாலும் இங்கிதக் குறைவாகவே தோன்றின.

போஸ்டர் ஒட்டித்தான் பிராபல்யத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்கிற நிலை அவருக்கும் இல்லை; மற்ற அமைச்சர்களுக்கும் இல்லை. மாற்றுக் கட்சிகளின் பெருந்தலைவர்களுக்கும் இல்லை. எனவே காகிதப் பற்றாக் குறை காலத்தில் இத்தனை சுவரொட்டிகள் எதற்கு என்ற பேச்சு முதல்வர் பிறந்த நாள் விழாவின்போது கிளம்பியது இயல்பு.

ஆபாசப் போஸ்டர்களைத் தடை செய்யத் தீவிர நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியுள்ளார் முதல்வர். இது போன்ற இங்கிதக் குறைவான சுவரொட்டிகளுக்கும் அவர் முடிவு கட்டலாம். இன்னும் ஒரு படி மேலே போய்ச் சுவரொட்டிகளே கூடாது என்றுகூடச் சட்டமியற்றலாம். சுவரில் தாரினாலும் இதர வர்ணங்களாலும் எழுதுவதற்கும் தடை விதிக்க வேண்டும். அப்போது தான் நகர்ப்புறங்களின் அழகு பாதுகாக்கப் படும்.

மானம் கப்பலேறுகிறது !

தமிழர் பாதுகாப்புப் பேரவை, தமிழர் மானத்தைக் கப்பலேற்றிக் கொண்டிருக் கிறது. திரு எம். ஜி. ஆர். நடித்துள்ள படம் திரையிடப்படவிருந்த தியேட்டருக்குள் புகுந்து இப்பேரவையைச் சேர்ந்தவர்கள் வெள்ளித் திரைக்குத் தீ வைத்திருக்கிறார்கள். அத்துடன் ஓர் அ.இ.மு.க. அங்கத்தினரைக் குத்திக் காயப்படுத்தியும் இருக்கிறார்கள்.

அராஜகம் நிகழ்த்தும் இந்தப் பேரவையில் தி.மு.க. அங்கத்தினர்களும் சேர்ந்திருப்பதும் அட்டகாசச் செயல்களில் ஈடுபடுவதும் வெட்கக் கேடு.

முதல்வர் திரு கருணாநிதி ரௌடி கும்பல் அடங்கிய இந்தப் பேரவைக்கு உடனே தடை விதித்துக் கலைத்துவிட வேண்டும். இந்த கைய அநாகரிகச் செயல்களில் ஈடுபடும் தமது கட்சிக்காரர்களைக் கட்சிக்கு இழுக்குத் தேடித் தருபவர்களாகக் கருதிக் கட்சியைவிட்டு நீக்கி விடவும் வேண்டும்.

அப்படிச் செய்யாவில்லையானால் தேசிய ஒருமைப்பாட்டிலும் ஜனநாயகத்திலும் மிகுந்த நம்பிக்கை உள்ளவராகத் தம்மை வர்ணித்துக் கொள்ளும் முதல்வரின் பேச்சுக்கள் ஐயப்பாட்டுக்கு உரியனவாகி விடும்.

மக்களின் நன்மதிப்பைப் பெறுகிற முறையில் முதல்வர் இயங்கட்டும்.

ஆராய்ச்சிச் சுற்றுலா

சுற்றுலா சிறப்பிதழில் சமீபத்தில் அமெரிக்காவிலும் கிழக்காசிய நாடுகளிலும் சுற்றிவிட்டு வந்த ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுவது பொருந்தும்.



பேராசிரியர் டாக்டர் வே. [illegible]ர் குஷாலாகக் கிளம்பிப் போகவில்லை. தாய்லாந்து ராமாயணம் பற்றி பாங்காக்கிலும் பௌத்த மரபுகள் பற்றி ஜப்பானிலும் ஆராய்ச்சி செய்தார். ஹவாய் பல்கலைக் கழகத்தில் சம்ஸ்கிருத நாடகக் கலை மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டார். வேறு பல பல்கலைக் கழகங்களில் சம்ஸ்கிருத ஆராய்ச்சிக்கும் போதனைக்கும் உதவுபடியாகச் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் நிகழ்த்தினார்.

மூன்று மாதங்கள் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய டாக்டர் ராகவனை அமெரிக்கா, கனடா, ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள சம்ஸ்கிருத ஆர்வம் எந்த அளவுக்கு உள்ளது என்று வினவினால், ''திருப்தி, ரொம்பத் திருப்தி, பூரண திருப்தி '' என்கிறார்.


திருப்பதி மலை – திருப்தி தரா நிலை !

திருப்பதி மலை மீது பிரார்த்தனையை முன்விட்டுப் படியேறிச் சென்ற வாசுதேவன் தம்பதிக்கு நேர்ந்த துன்பம் சொல்லி மாளாதது. வழிப்பறிக்கு ஆளான அவர்களுக்கு உதவ வந்த நண்பர் சேஷாத்திரி உயிர் துறக்கவும் நேரிட்டது.

பக்தி வளர்ப்பது நல்லதுதான்; மனிதாபிமானம் அதைவிட முக்கியமானது. திருப்பதி தேவஸ்தானத்தினர் ஏழுமலையானைத் தரிசிக்க வரும் பக்த கோடிகளுக்குச் சிறு துயரமும் நேராமல் காப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தால்தான் அவர்களது பக்தி வளர்க்கும் பணி அர்த்தமுள்ளதாகும். உண்டியல் தொகையை எண்ணும்போது காணிக்கை செலுத்தியவர்களின் நலனையும் எண்ண வேண்டும்.

போலீஸாரும் மருத்துவமனை ஊழியர்களும் நடந்து கொண்டவிதம் பற்றி 'ஹிந்து' பத்திரிகையில் வெளிவந்துள்ள கடிதம் உள்


கிஸ்ஸிங்கர்
அடேயப்பா, இவர்கிட்டே நிற்பது பெரும் ஆபத்தா யிருக்கும் போலிருக்கே!


வீண் வம்பு!
தமிழ்நாடு
கேரளா

ளத்தை உருக்குவதோடு கோபத்தையும் ஊட்டுகிறது.

காக்கும் கடவுளுக்கு மிக அண்மையில் இருக்கும் காவலர்கள் உயிர் காக்கும் பணியில் இத்தனை அசிரத்தை காட்டலாமா ?

திருப்பதி ஆஸ்பத்திரி ஊழியர்கள் சடலப் பரிசோதனையைத் துரிதமாக முடித்துக் கொடுக்காமல் அதற்கு லஞ்சம் கேட்டதை என்னவென்பது ? இத்தகைய அசுர சக்திகளை ஆண்டவன்தான் பார்த்துத் திருத்த வேண்டும் என்று காத்திராமல் அரசும் நடவடிக்கை எடுக்கட்டும் !

மின்வெட்டுக்கு முடிவுகட்டு!

வருஷா வருஷம் மின்வெட்டு என்பது வழக்கத்தில் வந்துவிட்டது. அவசியத்துக்கு அதிகமான கால அளவில் மின்வெட்டு நீடிக்கப்படுவதாய் விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். மின் உற்பத்தியை அதிகரிக்காவிடினும் இருக்கிற மின் நிலையங்களைத் திறம்பட இயங்க வைத்தாலே போதும், விநியோக ஆற்றலைச் சீர்செய்தாலே போதும் நமது சிரமங்கள் கணிசமாகக் குறையும் என்ற கருத்தும் நிலவுகிறது.

சாப்பாட்டில் சோறு மாதிரி தொழிலுக்கு மின்சாரம். நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டு வருகையில் தொழிலகங்களைப் பட்டினி போடுவதா? மின்சாரத்துக்கு ஓர் அவசரத் திட்டம் தேவை என்று கருதும் போது திரு கே. எல். ராவ் வகுத்த இந்தியா — இலங்கை மின்இணைப்புத் திட்டத்தை நினைவூட்டியுள்ளது ஹிந்து பத்திரிகை. நமக்கு மின்சாரப் பற்றாக்குறை காலத்தில் இலங்கையில் அதிகப்படி மின்சாரம் உள்ளது.



அங்கே பற்றாக்குறை ஏற்படும் காலத்தில் நாம் தன்னிறைவு காண்கிறோம். பருவ மழையும் நதிகளின் நீரோட்டமும் இதற்கேற்ப அமைந்துள்ளன. எனவே கடலுக்கு அடியில் 'கேபின்' போட்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே மின் இணைப்பு ஏற்படுத்தினால் மின்சாரப் பரிவர்த்தனை செய்துகொள்ளலாம். மின்சார விற்பனை மூலம் இலங்கை இந்தியாவுக்குத் தரவேண்டியுள்ள வர்த்தகப் பாக்கியும் தீரும். மிகப் பயனுள்ள இந்தத் திட்டத்தை முழுமூச்சுடன் நிறைவேற்றச் சம்பந்தப்பட்ட அனைவரும் தீவிரமாக முயல்வார்களாக.

பூசாரி வரம் கொடுத்துவிட்டார் !

பங்களா தேசத்தை ஐ. நா. சபையில் ஒரு முழு சுதந்திர நாடாக அனுமதிக்க, சீனா பாதுகாப்புக் கௌன்சிலில் தனது அங்கீகாரத்தைத் தெரிவித்துள்ளது. மிக மிக நல்ல செய்தி. நூற்றுக்கு மேற்பட்ட உலக நாடுகள் பங்களா தேசத்தைப் பூரண சுதந்திர நாடாக ஏற்றுக் கொண்ட பின்னரும் சீனா மட்டும் தனது தடுப்பு வோட்டு உரிமையை உபயோகித்து இதுவரையில் இதற்கு முட்டுக்கட்டை போட்டு வந்தது. இப்போது தான் சீனாவுக்கு நல்லெண்ணம் ஏற்பட்டிருக்கிறது! இருபதாண்டுகளுக்கு மேலாகச் சீனா உலக நாடுகள் அரங்கத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அந்த நிலையில் இருந்த சீனம், பங்களா தேசத்தை ஒதுக்கி வைக்கச் செயல்பட்டது பண்பற்ற போக்கு. இதைத் திருத்திக் கொண்டதோடு, இந்திய உபகண்டத்தின் பிரச்னைகளை அயல் நாடுகளின் தலையீடின்றி, அந்நாடுகள் அவையே தீர்த்துக் கொண்டு அமைதிக்குப் பாடுபடட்டும் என்று வாழ்த்துக் கூறி நல்லெண்ணம் தெரிவித்திருப்பது பாராட்டுக்குரியது. காலம் தாழ்த்தி எடுக்கப்பட்ட நடவடிக்கை என்றாலும் நல்ல காரியம் இப்போதாவது நடைபெறுகிறதே என்று மகிழ்ச்சி கொள்ளலாம். இனி உலக அரங்கில் பங்களா தேசம் பூரண உரிமையுடன் சுதந்திர நாடாகச் செல்வாக்குடனும் கௌரவத்துடனும் பணியாற்றும். பங்களா தேச விடுதலைப் போரின் கடைசி அத்தியாயம் முடிவுறுகிறது. மங்களம்.

ராஜாஜி சிந்தனை

அடக்கத்திலும் ஓர் அகம்பாவம்!

சென்ற இதழில் வெளியான ஸ்ரீ காஞ்சி ஆசாரியர்களின் அருள்வாக்கில் " 'நமக்கு அகம்பாவமே இல்லை' என்ற எண்ணம் வந்து அதில் ஒரு பூரிப்பு உண்டாகிவிட்டால், அதுவும்கூட அகம்பாவம்தான். எனவே அகம்பாவம் தலைதூக்க இடமே தராமல் சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்ற ஆணித்தரமான வாக்கினைப் படித்திருப்பீர்கள். மகாபுருஷர்களின் சிந்தனை எப்படி ஒருமித்து இருக்கிறது, அந்தச் சிந்தனையை வெளியிடும் அவர்களது சொற்களும்கூட எத்தனை நெருக்கமாக உள்ளன என்பது வியப்பூட்டுகிறது! பெரியவாளின் இதே கருத்தை ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்பு காந்தியடிகளின் ஸபர்மதி ஆசிரமத்தில் தொண்டர்களிடையே பேசும்போது, குறள் எனத்தக்கவிதத்தில், ரத்தினச் சுருக்கமாக ராஜாஜி கூறினார்கள்: *"Pride of any kind, including the pride of humility, is bad"* எல்லாவித மான அகம்பாவங்களும் — நாம் அகம்பாவமற்று அடக்கமாக இருக்கிறோம் என்று நினைக்கிற அகம்பாவம் உள்பட — தவறானது.

ஆசாரியாள் காட்டும் அம்பாள்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

நம்முடைய ஆசாரியர்களான ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் அம்பிகையை ஸ்தோத்திரம் செய்யும் அநேக கிரந்தங்களை அநுக்கிரகம் பண்ணியிருக்கிறார்கள். பரம அற்புதமான வாக்கிலே இவை அமைந்திருக்கின்றன. ஆனாலும் இவற்றைச் செய்த ஆசார்யாளோ துளிக்கூடக் கர்வப்படாமல், எல்லா சக்திகளுக்கும் ஆதாரமாக, சக்தி சமுத்திரமாக இருக்கப்பட்ட அவளை ரொம்பவும் விநயத்தோடு துதிக்கிறார்கள். தமக்கு அவளுடைய அநுக்கிரகத்தைக் கோருகிற யோக்கியதை கொஞ்சம்கூட இல்லை என்கிற நைச்சியமான எண்ணம் தொனிக்க அநேக இடங்களில் பேசுகிறார். 'ஸௌந்தரிய லஹரி'யில் குறிப்பாக இரண்டு இடங்களில் இந்த அதி விநயமான மனோபாவம் நம் மனசைத் தொடுகிற மாதிரி வெளியாகியிருக்கிறது. இவற்றில், ஓரிடத்தில் (த்ருசா த்ராகீயஸ்யா) அம்பாளின் கடாக்ஷத்தைப் பிரார்த்திக்கிறார்; மற்றதில் (ச்ருதீனாம் மூர்த்தானோ) அவளுடைய சரணாரவிந்த ஸ்பரிசத்தை வேண்டுகிறார். அம்பாளுடைய கடைக்கண் வீச்சைத் தம்மீது திருப்புமாறு கேட்கிறபோது, ''என்னையும் கூட (மாமபி) கடாக்ஷித்து அருள்வாய் அம்மா'' என்கிறார்; மற்ற இடத்திலும் ''என் சிரசிலும் கூட (மமாபி சிரஸி) உன் திருவடிகளை வைத்து அநுக்கிரஹம் பண்ணு தாயே'' என்கிறார். இரண்டு இடங்களிலும் இந்த ''அபி'' என்ற சொல்லையே பிரயோகம் செய்திருக்கிறார். ''தமக்கும் கூட'' அவளது அநுக்கிரகம் வேணும் என்று சொல்வதிலிருந்தே நியாயப்படி பார்த்தால் தமக்கு அதைப் பெறத் தகுதி இல்லை என்று நினைப்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. 'எந்த யோக்கியதையும் இல்லாமலே உன் அருளைக் கேட்கிறேனம்மா' என்று சொல்லாமல் சொல்கிறார்.

ஞானத்திலாகட்டும், பக்தியிலாகட்டும், புத்தியிலாகட்டும், வாக்கு வன்மையிலாகட்டும், காரிய சக்தியிலாகட்டும்—நம் ஆசாரியாளைப் போல பூரண யோக்கியதை உள்ளவர்கள் அவருக்கு முந்தியும் இல்லை, பிந்தியும் இல்லை. அப்படியிருந்தாலும் நமக்கெல்லாம் வழிகாட்டியாக, நாம் அம்பாளை எப்படி அடக்கத்துடன் பிரார்த்திக்க வேண்டும் என்று நமக்குச்சொல்லிக் கொடுக்கிற மாதிரி, **மாமபி, மமாபி** (என்னையும் கூட கடாக்ஷி, எனக்கும் கூட திருவடியைத் தா) என்கிறார்.

யோக்கியதை இல்லாமல் கேட்கலாமா என்றால், நியாயப்படி அது சரியில்லைதான். ஆனால் நியாய அநியாயங்களைப் பார்க்காமல் நல்லதையே செய்து கொண்டிருக்கிற அன்புமயமான வஸ்துக்களும் இருக்கின்றனவே என்று எடுத்துக் காட்டுகிறார். ''நல்ல பூர்ணிமை நிலா ராஜாவின் நிலா முற்றத்தில் மட்டுமா விழுகிறது? காட்டிலே இருக்கிற கள்ளிப் புதர் மேலே கூடத்தானே அமிருதமாகப் பொழிகிறது? சந்திரிகை எப்படி யோக்கியதை பார்க்காமல் சகல இடங்களிலும் சமமாக விழுந்து குளிர்ச்சியும் பிரகாசமும் தருகிறதோ, அப்படியே உன் கடாக்ஷ வெள்ளமானது தகுதி வாய்ந்த உத்தம அதிகாரிகளின் மேல் மட்டுமல்லாமல் என் மேலும் கூட விழுந்து என்னையும் ஸ்நானம் பண்ணி வைக்கலாகாதா? ஞானத்தின் பிரகாசத்திலும் காருண்யத்தின் குளிர்ச்சியிலும் என்னை முழுக்கக் கூடாதா?'' என்கிறார் 'த்ருசா த்ராகீயஸ்யா' சுலோகத்தில்.

இப்படியே அம்பாளுடைய சரண கமலங்களைத் துதிக்கிறபோது, 'வேதங்கள் சிரசுக்கு ஆபரணமாக எந்த உன் பாதங்களைத் தாங்குகின்றனவோ, அந்தப் பாதங்களை என் சிரசிலும் கூட வைப்பாய் அம்மா' என்கிறார்.

இப்படிக் கேட்பது நியாயமில்லையே என்றால், 'நியாயம் – அநியாயம் என்பவை காரிய - அகாரியங்களை எடை போடுகிற போதுதான். தயை என்பதோ இப்படி குறை குணங்களை எடை போட்டுப் பார்ப்பதில்லை. நீயோ தயையே வடிவமானவள். எனவே அந்தத் தயையால் என் தலைமீதும் கூட உன் திருவடிகளை வைப்பாய்' என்கிறார். (தயயா தேஹி சரணௌ)

வேதத்தின் சிரசில் அம்பாளின் பாதம் இருக்கிறது என்பதில் ஓர் உள்ளர்த்தம் உண்டு. உபநிஷத்துக்களுக்கே சுருதி சிரஸ், வேதங்களின் முடி என்கிற பெயர் இருக்கிறது. முன்பே நான் ஞானாம்பிகையைப் பற்றிச் சொல்கிறபோது கேநோபநிஷத்தில் அவளுடைய ஆவிர்பவத்தைப் பற்றி வருகிறது என்று சொல்லியிருக்கிறேன். தேவர்கள் அகம்பாவம் அடைந்தபோது, அதைப் போக்கி அவர்களுக்கு ஞானம் தருவதற்காக அம்பிகை தோன்றியதைக் கேநோபநிஷத் சொல்கிறது. இங்கே ஆசார்யாள் அதை மனசில் கொண்டே சொல்வதாகத் தெரிகிறது. அகம்பாவ நிவிருத்திதான் ஞானத்துக்கு வழி என்று அந்த உபநிஷத்திலிருந்து தெரிகிறது. அதற்கு ஏற்றாற்போல் இங்கேயும் அகம்பாவமே இல்லாமல் ரொம்பவும் அடங்கி, ''மமாபி'' என்கிறார்.

நாளேடு நல்ல துணை

கல்கிக்குப் "பயணத் துணை" கட்டுரை அனுப்ப நாளைதான் கடைசி நாள் என்று நினைவூட்டும் எனது நாளேட்டை அன்புடன் வருடிக் கொடுக்கிறேன். நாளேட்டைவிட நல்ல பயணத் துணை எங்கே கிடைக்கும்?

அவசரப் பயணமா? எனது நாளேட்டின் கடைசிப் பக்கத்தைத் திருப்புகிறேன். பயணப் பொருட்களுக்கான பட்டியல் ஒன்று அங்கே உள்ளது. ஐந்தே நிமிடங்களில் நான் பயணத்துக்குத் தயார்!

பயணச் சீட்டுப் பரிசோதகர் சீட்டைக் கேட்டால் நான் பரதநாட்டியம் ஆடமாட்டேன். நாளேட்டில் ஜனவரி 15ஆம் பக்கத்தில் சீட்டு பத்திரமாக இருக்கும்.

பொழுது போகவில்லை. நாளேட்டைப் புரட்டுகிறேன். சிறிய துணுக்குகள், கவிதைகள். உள்ளத்தைக் கற்பனைக் குதிரையில் ஏற்றிவிட இவை போதாதா?

ஊர் போய்ச் சேருகிறேன். செய்ய வேண்டிய காரியங்களை நாளேட்டில் வரிசையாகக் குறித்து வைக்கிறேன். ஒன்றன்பின் ஒன்றாகக் காரியங்கள் கச்சிதமாகத் திட்டமிட்டபடி நடந்துவிடுகின்றன. டைரக்ஷன் எனது டைரியே!

நாளேட்டில் உள்ள முக வரிகள் தெளிவாக வழிகாட்டுகின்றன. கொடுக்கல், வாங்கல், பெயர்கள், முகவரிகள் போன்ற அவசரக் குறிப்புக்களுக்கு நாளேடு உடனே கைகொடுக்கிறது.

பயணத்தின் போது இங்குமங்குமாகச் செலவு இருந்து கொண்டேயிருக்கும். ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் போன்றவற்றுக்கு நாளேடு ஒரு குட்டி மணிபர்சாக இருப்பதோடு, செலவுக் கணக்குகளை உடனுக்குடன் குறித்துக் கொள்ளவும் பயன்படுகிறது.

திடுமென்று கடிதம் எழுதத் தோன்றும். அதற்காக அஞ்சலகத்தைத் தேடி அலைய

இயற்கையே துணை



கோடைக்கானலின் பின்பக்கச் சாரலில் பிரயாண வசதிக்கான சாலை அமைத்துக் கொடுக்கப்படாத ஒரு கிராமம் உண்டு. அந்தக் கிராமம் ஒரு குட்டி மலையின் உச்சியில் இருந்தது. அதன் வழியாகக் கும்பக்கரை என்னும் அருவியை அடைந்து அங்கிருந்து பழனிக்குச் செல்லலாம். அப்படி ஒரு முறை பயணத்தைத் தொடங்கினோம். காட்டு மலர்களின் நெடி மூக்கைத் துளைத்தது. பாதி தூரம் சென்றதும் குறுக்கே 'பரபர'வென்று ஒரு சாரைப் பாம்பு ஓடியது. சிறிது தூரத்தில் நரி முகத்திலும் விழித்தோம். அதன் பலன்தானோ என்னவோ, ஒரு செங்குத்தான பாதையின் வழியாகப் பதினைந்தடி பள்ளத்தில் மரத்தின் வேர்களால் ஆன ஏகப் பிசகான படிகளில் இறங்க வேண்டியிருந்தது. அதோடு வேறு எத்தனையோ அபாயங்கள், யானை, கரடி, முள்ளம்பன்றி என்று!

ஒருபுறம் அச்சம் தந்தாலும் இன்னொரு புறம் மான்களும் அழகிய மயில்களும் அழகுணர்ச்சி ஏற்படுத்தின.

கும்பக்கரை அருவியின் 'சலசல' ஓசை கேட்ட போது உற்சாகம் தலைதூக்கியது. அருவியின் ஆழமற்ற பகுதியைக் கடந்து அக்கரையை அடைந்தோம். தண்ணென்றிருந்த அருவியில் நீராடிக் கரையேறினால் அவ்வளவு தொலைவு நடந்து வந்த களைப்பு இருந்த இடம் தெரியாமல் பறந்துவிட்டது.

இயற்கை அன்னையின் துணை அபாயங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கவே விடவில்லை! என்னைப் பொறுத்தவரை இயற்கையைப் போன்ற துணை வேறு எதுவும் இல்லை.

—கமலக்ஷ்மி

கவி கற்பனை

திடுமென்று பயணம் செல்ல வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டால் நான் கவிதையின் துணையைத்தான் நாடுவேன்.

சுவாரசியமான நாவல்கள் என்றால் அவை நம்மைத் தங்களுடன் ஐக்கியப்படுத்திவிடக் கூடும். எரிச்சலூட்டுகிற நவீனங்களென்றால்



பயணத்தின் சுவையோடு நாம் ஐக்கியமாவதைக் கெடுத்துவிடக்கூடும். பயணத்தையும் சுவைக்க வேண்டும், பயணத்தால் ஏற்படும் களைப்பையும் மறக்க வேண்டும் என்பதால் நான் கவிதைத் தொகுதிகளையே விருப்பத்துடன் தேர்ந்தெடுப்பேன்.

கவிதைகளில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தாலும் கவிதைத் தொகுதிகளைப் படித்து முடிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தக்

துணைக்கொரு துர்க்கா!

வழித் துணை என்றதும் எனக்கு அடுத்த வீட்டுப் பெண் துர்க்காவின் நினைவுதான் வந்தது.

துர்க்கா! - நல்ல உயரம். அதற்கேற்ற பருமன். கரிய பெரிய விழிகள். வெண்கலக் குரல். நிமிர்ந்த நடை. அச்சம் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கக் கூடியவள். தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் ஓரளவு பேசத் தெரிந்தவள். அதோடு நாட்டு வளப்பமும் அத்துபடி.

நானோ கேட்க வேண்டாம். சின்ன ரயில், பெரிய ரயில் என்பார்களே அதில் சின்ன வயதிலே போனவள். அதோடு நல்ல பயங்கொள்ளி வேறு. துர்க்கா அதற்கு நேர் மாறு. எனக்குச் சரியான பாடிகார்டு அவள். என் காது, கழுத்து, கைகளிலே ஐம்பது அறுபது சவரன்களுக்கு மேலே இருக்கும். காலம் கெட்டுக் கிடக்கிறது அல்லவா? பிரயாணம்

முடியுமா ? கார்டு, கவர் போன்றவை எனது நாளேட்டுக்குள் அடக்கமாகி இருக்கும்.

பயண நேரத்தில் வந்து சேரும் முக்கியமான காகிதக் குறிப்புக்களுக்கெல்லாம் சேமிப்புக் கிடங்கு நாளேடுதான்.



பயணத்தில் ஏதேனும் விபத்து நேர்ந்தால், என்னை அடையாளம் காட்ட எனது நாளேடு உயிர் வாழும். எனது நிழற்படமும், முகவரியும் அதனிடம் உள்ளன.

'கண்ணன் என் சேவகன்' என்றார் பாரதியார். கண்ணன் நாளேட்டின் வடிவிலே எனக்குத் துணை புரியும் போது, வேறு எந்தத் துணையை நான் நாடுவது?

—முத்துதங்க ஐயப்பன்

துக்குட்பட்டு உட்கார்ந்தால் அவை மிகுந்த களைப்பையும் எரிச்சலையும் ஊட்டுகின்றன.

ஆனால் பயணம் செய்யும் போது கவிதைகளைத் தனித்தனியே படிப்பதால் மனத்தில் நின்று நிலைப்பவையாகத் தோன்றுகின்றன. காரணம், ஒரு கவிதையைப் படித்துவிட்டு, ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்கும் போதும் ரயிலாக இருந்தால் எழுந்து நடக்கும்போதும் கவிதையின் சிறப்பு அம்சங்களை அசை போட்டுச் சுவைக்க முடிகிறது.

நான் கவிதை நூல்களின் துணையை நாடுவதற்கு, கவிதையார்வம் மட்டும் காரணம் அல்ல; வேறு ஒரு முக்கியமான காரணமும் உண்டு. அதை ரகசியமாகச் சொல்லி வைக்கிறேன். பத்திரிகைகள், கதைப் புத்தகங்கள் என்றால் சகப் பயணிகள் இரவல் கேட்டு வாங்கிக் கொள்வதால் படிப்பில் நமக்கிருக்கும் சுவாரஸ்யம் தாற்காலிகமாகத் தடைப்பட்டுவிடுகிறது. கவிதைப் புத்தகங்கள் என்றால் யாருமே இரவல் கேட்கமாட்டார்கள் பாருங்கள் ! எப்படி என் திட்டம்? கவி — கற்பனை துணை புரிகிறது என்கிறீர்களா ?

— ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன்

போகும்போது காது மூக்கைத் துடைத்து விட்டா போவாள் ஒருத்தி ?

பாரதியார் கண்ணனைப் போல் துர்க்கா என்னைக் கண்ணை இமை காப்பது போல் காப்பாள். அலுப்புத் தோன்றாமல் அரட்டையடிப்பாள். நான் கேட்பதை வாங்கித் தருவாள். என் வீட்டுக்காரரைப் போல் முறைக்க மாட்டாள். நாலு இடங்களைப் பற்றிச் சொல்லி நல்லபடியாக அழைத்துச் சென்று காட்டவும் செய்வாள்.



ஆக, துணைக்கொரு துர்க்காவைத்தான் அழைத்துச் செல்வேன்.

- குமுதா



கைம்மாறு கருதாத் துணை

(முதல் பரிசான ரூ. 50/- பெறும் கட்டுரை)

நான் உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்ற அன்று என் அலுவலக நண்பர்கள் எனக்குப் பிரிவு உபசார விழா ஒன்று நடத்தினார்கள். அந்த விழாவில் நான் எதிர்பார்த்ததைப் போல் இல்லாமல் எனக்குக் கைத்தடி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினர். அதன் பெருமை அப்பொழுது எனக்குத் தெரியவில்லை.

என்னுடைய கைத்தடியின் நுனியில், பிரகாசிக்கும் ஒரு பூண் போடப்பட்டிருக்கிறது. நடை பிரயாணம் செல்லும்போது இதைப் பூமியில் தட்டிக் கொண்டே போனால் இன்பகரமான ஓர் ஒலியை எழுப்பிக் கொண்டே வரும். சில சமயங்களில் என் மனைவிதான் விரல் மெட்டியின் ஒலியை எழுப்பிக்கொண்டு என்னுடன் நடந்து வருகிறாளோ என்ற பிரமையை உண்டு பண்ணும். பல சமயங்களில் ஒளி தேவதை வழி காட்டிக் கொண்டு போவதைப் போலத் தோன்றும்.

எந்த நேரத்திலும், மனம் கோணாமல் எடுத்தார் கைப் பிள்ளைப் போல் எனக்குத் துணையாக நின்று உதவி செய்வதைப் பார்க்கும் போது வாழ்க்கையின் கடைசிக் காலத்தில் ஒரு நல்ல துணைவன் கிடைத்த பூரிப்பு. சாலைகளில் வெறி நாய்கள் மேலே விழுந்து கடிக்காமல் சேவகனாக நின்று விரட்டுகிறது. மழைக் காலங்களில் கிராமங்களுக்குச் செல்லும் நேரத்தில் ஓடைகளிலும், வாய்க்கால்களிலும் தண்ணீரை அளந்து காண்பித்துக் கடக்கலாமா கூடாதா என்பதை அறிய உதவுகிறது. திருடர்களும், ஜேப்படிக்காரர்களும் கிட்ட நெருங்காமல் பத்துப் போலீஸ்காரர்கள் சேர்ந்து கொடுக்கும் பாதுகாப்பைத் தருகிறது.


இதைத் துணையாக எடுத்து நடந்து செல்லும் போது, எனக்கே தெரியாமல் ஒரு தைரியமும், மனக் களிப்பும், நடையில் மிடுக்கும், யௌவனப் பருவத்துக்கு மீண்டும் திரும்பி விட்டாற் போன்ற உணர்வும் உண்டாகின்றன. பிரயாணத்தின் போது இவ்வளவு உதவி செய்யும் தோழனுக்கு என்ன 'கைம்மாறு' செய்வது? தினம் தினம் இரண்டு ரூபாய் செலவானாலும் நான் மனம்கோண மாட்டேன். ஆனால் எனது இந்தத் தோழன் பலன் நோக்காமல் தன் கடமையை ஆற்றி எனக்குப் பண மிச்சமும் செய்து வைக்கிறது !

இந்தக் கைத்தடி எனக்குக் கொடுத்து வரும் உதவிகளையும், பெருமைகளையும் என் மகன்கள், பேரன்கள், கொள்ளுப் பேரன்கள் யாவருக்கும் வாழையடி வாழையாகக் கொடுக்கும்.

—பி. வி. கேசரி

5000 அடி உயரத்தில் உள்ள ஏர்க்காடு மலை மீது, எழில் மிகுந்த ஏரிக்கு அப்பால், விஸ்தாரமான பூங்காவின் மத்தியில் எழுப்பப்பட்டுள்ளது ஹோட்டல் ஷேவராய்ஸ். உல்லாசப் பயணிகள் விரும்பும் எல்லாவித வசதிகளும் இங்கே நிரம்பப் பெற்றுள்ளன என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.—விசாலமான, நேர்த்தியான அறைகள், ஒவ்வொன்றிலும் மிக நவீனமான சாதனங்கள், பயணிகளை வசீகரிக்கும் உணவுகள் நேர்த்தியானதோடு முதல்தரமானது, அத்துடன் வீட்டுத் தயாரிப்புகளின் சுவையுள்ளது. ருசிக்கும், வெவ்வேறு ரகங்களுக்கும் ஹோட்டல் ஷேவராய்ஸில் எல்லாப் பயணிகளுக்கும் எளிதில் கிடைக்கும்வண்ணம் மலிவான கட்டண விகிதத்தில் உணவு அளிக்கப்படுகிறது. மாறிக்கொண்டு வரும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப அறைகள், குளிர் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. தங்கி இருக்கவும் சுற்றுப்புற இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கவும், ஓய்வுக் காலத்தை கழிக்கவும், யாராருக்கு எவ்விதம் தேவையோ அவ்விதம் இந்த நேர்த்தியான மலைவாசஸ்தல ஹோட்டல் வசதி அளிக்கிறது. தனி அறை, இருவர், மூவருக்கான அறைகள் என்று தேவைக்குத் தக்கதாக உள்ளன. ஒவ்வொன்றிலும் வெந்நீருக்கு நவீன சாதனமும், குளியல் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. சுகத்தை அளிக்கும் கட்டில் நாற்காலிகளும், உங்கள் உல்லாசத்தை அதிகரிக்கும். மோட்டார் நிறுத்தத் தனி இடங்களும், திறந்த வெளி நாடக மேடையும் கூட இருக்கின்றன.

hotel SHEVAROYS



ஹோட்டல் ஷேவராய்ஸ்

ஏர்க்காடு. சேலம். போன்: 88

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்
பிக்ஷுவின் மனமாற்றம்

பாறைகளைப் பார்வையிடுவதற்காக மகேந்திர பல்லவர், ஆயனர், சத்ருக்னன் ஆகிய மூவரும் மடத்திலிருந்து புறப்பட்டபோது வாசலில் சிவகாமி வந்து நின்றாள்.

மகேந்திர பல்லவர் தற்செயலாக அவளைப் பார்ப்பது போல் பார்த்து, ''சிவகாமி! நீகூட எங்களுடன் வருகிறாயா?'' என்று கேட்டார்.

சிவகாமி மறுமொழி சொல்லத் தயங்கினாள். ஆயனர் அப்போது, ''வா, சிவகாமி, போய்



விட்டு வரலாம். இங்கே நீ தனியாக என்ன செய்யப் போகிறாய்?'' என்றார்.

எனவே, சிவகாமியும் புறப்பட்டாள். அவளைத் தொடர்ந்து ரதியும் சுகரும் கிளம்பினார்கள்.

* * * *



சிவகாமி பின்தங்கியதற்குக் காரணம் இருந்தது.

பெட்டிக்குள் சிங்க இலச்சினையை வைத்து விட்டுச் சிவகாமி நிமிர்ந்த போது தூண் மறைவில் காவித் துணி தெரிந்தது. தூணில் மறைந்திருப்பது புத்த பிக்ஷுதான் என்பதையும் உணர்ந்தாள். அன்று அதிகாலையில் வந்து அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த புத்தபிக்ஷு வாசலில் வேற்று மனிதர் குரல் கேட்டதும், ''பின்புறமாகப் போய் விடுகிறேன்'' என்று சொல்லி விட்டுப் போனார். போனவர், எப்படித் திரும்பி வந்தார், ஏன் மறைந்து நிற்கிறார் என்று சிவகாமிக்குச் சற்று வியப்பாயிருந்தது.

நேற்று வரைக்கும் இம்மாதிரிச் சந்தர்ப்பம் நேரிட்டிருந்தால் அவள் உடனே கூச்சல் போட்டிருப்பாள்.

ஆனால், காலையில் புத்த பிக்ஷுவுடன் பேசிக் கொண்டிருந்ததிலிருந்து அவளுடைய மனம் அவர் விஷயத்தில் அடியோடு மாறிப் போயிருந்தது. அவர் மேல் முன்னம் அவளுக்கு ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் எல்லாம் நீங்கி நல்ல எண்ணமே உண்டாகி யிருந்தது.

இந்த மனமாறுதலுக்குக் காரணமாயிருந்தது என்னவென்றால், குமாரசக்கரவர்த்தி மாமல்லரைப் பற்றித் தமது அபிப்பிராயம் அடியோடு மாறி விட்டதாக் பிக்ஷு கூறியதுதான்.

''மூடஜனங்கள் கூறியதைக் கேட்டு மாமல்லரைப் பயங்கொள்ளி என்றும், கோழை என்றும் சொன்னேன். அப்படிச் சொன்ன நாவை அறுத்துக் கொள்ளலாம் என்று இப்போது தோன்றுகிறது. போர்க்களத்தில், நானே நேரில் பார்த்தேன். அடடா! 'வீரத்துக்கு அர்ச்சுனன்' என்ற பேச்சை இனிமேல் விட்டு விட்டு, 'வீரத்துக்கு மாமல்லன்' என்று வழங்க வேண்டியதுதான். ஆயிரம் பேருக்கு மத்தியில் தன்னந் தனியாக நின்று வாளைச் சுழற்றி எப்படி வீரப் போர் புரிந்தான்! அசகாய சூரன் என்றால் மாமல்லன்தான்!''

இவ்விதம் புத்த பிக்ஷு மாமல்லருடைய வீரத்தை வர்ணித்ததுடன்,





அவருடைய குணத்தையும் பாராட்டினார். மாமல்லனை 'ஸ்திரீ லோலன்' என்று தாம் கூறியதும் பெருந் தவறு என்று அறிந்து கொண்டதாகவும், பெண்களைக் கண்ணெடுத்துப் பார்க்காத பரிசுத்தன் என்றும், அப்பேர்ப்பட்ட உத்தம வீர புருஷனைக் காதலனாகப் பெறுவதற்கு எந்த இராஜகுமாரி பாக்கியம் செய்திருக்கிறாளோ என்றும் சொல்லச் சொல்ல, சிவகாமி தன்னுடைய மகத்தான பாக்கியத்தை எண்ணி இறும்பூது எய்தியதுடன், புத்த பிக்ஷுவின் மீது முன்னெப்போதும் இல்லாத நல்ல எண்ணமும் விசுவாசமும் கொண்டாள்.

அசோகபுரத்தில் திடீரென்று புத்த பிக்ஷு மறைந்த காரணத்தை ஆயனர் கேட்டதற்கு, நாகநந்தி கூறியதாவது: ''அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? கங்க நாட்டு துர்விநீதனை நான் அறிவேன். பௌத்த சங்கத்தைச் சேர்ந்தவன். என்னிடமும் அவனுக்குப் பக்தியுண்டு. குண்டோதரன் அன்று ஓர் ஓலை கொண்டு வந்து கொடுத்தானல்லவா? 'துர்விநீதன் காஞ்சி மேல் படையெடுத்து வருகிறான்' என்ற செய்தி அந்த ஓலையில் இருந்தது. அத்தகைய விபரீதமான முட்டாள்தனமான காரியத்தை அவன் செய்யாமல் தடுக்கலாம், திரும்பிப் போகச் சொல்லலாம் என்ற எண்ணத்துடன்தான் இரவுக்கிரவே ஓடினேன். குண்டோதரனுடைய குதிரையைக் கூட அதற்காகத்தான் எடுத்துக் கொண்டேன். என் முயற்சி பயன்படவில்லை. நான் போவதற்குள் போர் மூண்டு விட்டது. நான் எதிர்பார்த்தபடியே துர்விநீதன் வீர மாமல்லனால் முறியடிக்கப்பட்டு ஓட நேர்ந்தது. எங்கே ஓடினானோ, என்ன கதி அடைந்தானோ தெரியாது!''

இப்படியெல்லாம் மாமல்லருடைய புகழைக் கேட்கக் கேட்கச் சிவகாமிக்கு உள்ளம் குளிர்ந்ததுடன் புத்த பிக்ஷுவின் மீது அவளுடைய விசுவாசம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

''சுவாமி! தாங்களும் இந்தக் கிராமத்தில் எங்களுடனேயே தங்கி யிருந்து விடுங்களேன்!'' என்று சொன்னாள்.

அதற்கு பிக்ஷு, ''இல்லை அம்மா, இல்லை! ஓரிடத்தில் தங்கியிருப்பது என்னுடைய தர்மத்துக்கே விரோதம். தென்னாடு இப்போது என்னைப் போன்ற பிக்ஷு யாத்திரீகர்களுக்குத் தகுந்த இடம் இல்லை. தெற்கே யிருந்து பாண்டியன் படையெடுத்து வருகிறான். வடக்கே யிருந்து சளுக்கன் படையெடுத்து வருகிறான். உங்கள் இருவரையும் பத்திரமான இடத்தில் விட வேண்டுமென்றுதான் கவலைப்பட்டேன். இந்தக் கிராமம் உங்களுக்குத் தகுந்த இடம்தான். புத்த மகாப் பிரபுவின் அருள் இருந்தால், யுத்த மெல்லாம் முடிந்த பிறகு மறுபடியும் உங்களைப் பார்ப்பேன். ஆயனரே! அடுத்த தடவை உங்களைப் பார்க்க வரும்போது அஜந்தா இரகசியத்தைக் கட்டாயம் அறிந்து கொண்டு வருவேன். சிவகாமி! இங்கேயே உங்களுடன் தங்கி, உன்னுடைய தெய்வீக நடனக் கலையைப் பார்த்துக் கொண்டிருக்க எவ்வளவோ இஷ்டம்தான். ஆனால் அதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா?...'' என்று பிக்ஷு கூறியபோது அவருடைய குரலில் தொனித்த கனிவு, சிவகாமியின் உள்ளத்தை உருக்கி விட்டது.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான், வாசலில் குண்டோதரன் கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. அப்போது பிக்ஷு, ''ஆயனரே! உங்களுடைய சிஷ்யன் குண்டோதரன் என்பேரில் அநாவசியமான சந்தேகம் ஏதோ கொண்டிருக்கிறான். என்னை இங்கு பார்த்தானானால் வீணாக வலுச் சண்டைக்கு வருவான். இன்னும் யாரோ வேற்று மனிதர்கள் வாசலில் வந்திருப்பதாகக் கூடத் தோன்றுகிறது. நான் இப்படியே பின்புறமாகப் போய் விடுகிறேன். விடை கொடுங்கள்'' என்று கூறிப் புறப்பட்டார். போகும்போது, ''சிவகாமி! மறுபடியும் உங்களைப் பார்க்கிறேனோ என்னவோ? ஆனால், நான் எங்கே போனாலும், என்ன செய்தாலும் உன்னை மறக்க முடியாது. உன்னை மறந்தாலும் உன் நடனத்தை மறக்க முடியாது!'' என்று கனிந்த குரலில் சொல்லி விட்டுப் போனார்.

அப்படிப் போனவரைத் திடீரென்று உள் அறையில் தூண் மறைவில் பார்த்ததும் சிவகாமிக்குச் சிறிது வியப்பாய்த்தானிருந்தது. ஆயினும் மறுபடியும் தன்னிடம் ஏதோ சொல்வதற்காக ஒருவேளை காத்திருக்கிறாரோ என்னவோ, சக்கரவர்த்தி போன பிறகு விசாரித்துக்கொள்ளலாம் என்று வெளி அறைக்கு வந்து விட்டாள். உண்மையில் பிக்ஷு போகாமல் தங்கி யிருந்தது சிவகாமிக்குச் சிறிது மகிழ்ச்சியை அளித்தது என்றே சொல்ல வேண்டும்.

இப்போது மடத்து வாசலில், சக்கரவர்த்தி, ''நீயும் எங்களுடன் வருகிறாயா?'' என்று கேட்டதும், தூண் மறைவிலிருந்த புத்த பிக்ஷுவை நினைத்துக்கொண்டு சிவகாமி ஒரு கணம் தயங்கினாள். ஆனால் ஆயனரும் சேர்ந்து அழைத்ததும், தடுத்துச் சொல்ல முடி



வசந்தம் தரும் புன்னகை

வசந்த காலம். இளமையான கனவுகளில் களித்திடும் இளைய ஜோடிகள். அவர்களின் இனிய திருமண நாட்களில் அணிந்து மகிழ அழகுக்கு அழகூட்டும் நவீன டிசைன்களில் பட்டுச் சேலைகள். புகழ் பெற்ற ஊர்களில் பெயர் பெற்ற கைவண்ண கலைஞர்களால் தயாரிக்கப்பட்டு முதலாவதாக உங்களுக்கு வழங்குகிறது கீதா. ஏராளமான மில் கைத்தறி ஜவுளி ரகங்கள் இளைய சமுதாயத்தினரின் எழுச்சியூட்டும் ரகங்கள்.

தேவையானவற்றை தனித் தனி மாடியில் தேர்ந்தெடுங்கள்.

கீதா

சில்க் & சாரி பஜார்

31-32, N.S.B, ரோடு,
திருச்சி-620002



CROWN-G20

ஷேவர் ஸ்விஷ்

பயங்கர ''கொலைகாரப்-பாய்ச்சலில்''



ஒவ்வொரு முறையும் இதே கதை: ஸ்விஷ் க்ஷவரம் செய்து கொள்பவரை மிஞ்சுவதற்கில்லை.

(ஆயின், நீங்களும் பங்கு பெறலாம் அவனது அடுத்த சாகசச் செயலில்)

யாமல், ''ஆகட்டும், அப்பா!'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

நாகநந்தி பிக்ஷு தான் திரும்பி வரும் வரையில் ஒருவேளை அங்கேயே இருக்கலாம் என்ற எண்ணமும் அவன் மனத்தில் இருந்தது.

நாற்பத்தாறும் அத்தியாயம்

திரிமூர்த்தி கோயில்

பாறைகளை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தபோது, மாமல்லரைப் பற்றியோ, அவருக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றியோ சக்கரவர்த்தி ஒன்றும் பேசவில்லை. ஆயனரிடம் சிற்பக் கலையைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார். இரண்டு பேரும் இந்த உலகத்தையே மறந்து பேசிக் கொண்டு போனார்கள்.

பாறைப் பிரதேசத்தை அடைந்த பிறகும் அப்படித்தான். இந்தப் பாறையை யானையாகச் செய்யலாம். இதைச் சிங்கமாகச் செய்யலாம். இதைத் தேராக அமைக்கலாம். இதை வஸந்த மண்டபமாக்கலாம் என்றெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியாக, ஒரு பெரிய பாறையைக் குடைந்து கோயிலாக அமைப்பது என்றும், கோயில் வேலையையே முதன் முதலில் தொடங்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

''இந்த ஒரே கோயிலில் மூன்று மூர்த்திகளையும் பிரதிஷ்டை செய்யலாம், ஆயனரே! மூன்று கர்ப்பக் கிருகங்களை அமைத்து விடுங்கள்!'' என்றார் மகேந்திர பல்லவர்.

''சுவாமி! மூன்று மதத்தினருக்கும் தனித் தனியாக மூன்று கோயில்கள் அமைத்து விட்டால் நல்லதல்லவா? சச்சரவுக்கு இடமில்லாமல் போகுமல்லவா?'' என்று ஆயனர் கேட்டார்.

''மூன்று மதத்தினருக்கா? நான் அப்படிச் சொல்லவில்லையே? மும்மூர்த்திகள் என்று யாரைச் சொன்னதாக எண்ணினீர்கள்?''

''சிவபெருமான், புத்த தேவர், ரிஷப தேவர் இவர்களைத்தானே?''

''இல்லை ஆயனரே! பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகளைச் சொன்னேன்.''

''அப்படியா?''

''ஆம். இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பௌத்தர், சமணர் என்று என்னிடம் சொல்லாதீர், ஆயனரே! அவர்கள் விஷயத்தில் அப்படி என் மனம் கசந்து போயிருக்கிறது.''

''ஐயோ! அருள் நிறைந்த தங்கள் உள்ளம் கசந்து போகும்படி அவர்கள் என்ன செய்து விட்டார்கள்?''

''ஆஹா! சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் நான் எவ்வளவு கௌரவம் கொடுத்திருந்தேன்! அவர்களைத் திருப்திப்படுத்த என்னவெல்லாம் செய்தேன்! ஒன்றும் பயன்படவில்லை. பாடலிபுரத்துச் சமணப் பள்ளியில் துர்விநீதன் ஒளிந்து கொள்ள அவர்கள் இடம் கொடுத்தார்கள். பல்லவ சைனியம் அந்தச் சமணப் பள்ளியை இடித்துத் தரை மட்டமாக்கிப் பாதாளக் குகையில் ஒளிந்திருந்த துர்விநீதனைப் பிடிக்க வேண்டியிருந்தது. இப்போது அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் தெரியுமா? தேசதேசமெல்லாம் போய், 'காஞ்சி மகேந்திர பல்லவன் சமணப் பள்ளியை இடித்துத் தள்ளினான்' என்ற பழியைப் பரப்பப் போகிறார்கள்! அது போகட்டும், ஆயனரே! எனக்கு அதிகமாகத் தாமதிக்க நேரமில்லை. போய் வருகிறேன். யுத்தம் முடிந்து நான் திரும்பி வந்து பார்க்கும்போது கோயில் வேலை முடிந்திருக்க வேண்டும். சத்ருக்னா! நம்முடைய தெப்பத்தை எங்கே விட்டு விட்டு வந்தோம்? சீக்கிரம் போய்ப் பார்த்துக் கொண்டு வா!'' என்று கூறிவிட்டு, ''ஆயனரே! நீங்களும் கொஞ்சம் பார்க்கிறீர்களா? இந்த நதிக் கரையில் எங்கேயோ தெப்பத்தை விட்டிருக்கிறோம். இரண்டு பேருமாகச் சென்று பார்த்தால் சீக்கிரம் கண்டு பிடிக்கலாம்!'' என்றார்.

அவ்விதமே ஆயனரும் ஒற்றர் படைத் தலைவரும் தெப்பத்தைத் தேடிக் கொண்டு சென்றார்கள்.

இத்தனை நேரமும் சிவகாமி ஒரு பக்கத்தில் நின்று ரதியைத் தடவிக் கொடுத்துக் கொண்டும், மெல்லிய குரலில் ஏதோ ஒவ்வொரு வார்த்தை சொல்லிக் கொண்டும் இருந்தாள்.

ஆயனர், சத்ருக்னன் இருவரும் அங்கிருந்து சென்றதும் சக்கரவர்த்தி அவளருகில் வந்து ஒரு பாறைமேல் உட்கார்ந்து கொண்டு, ''சிவகாமி! உன்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். சற்று இந்தப் பாறை மேல் உட்காருகிறாயா?'' என்றார்.

ஏதோ சந்தோஷமற்ற விஷயந்தான் சக்கரவர்த்தி பேசப் போகிறார் என்று சிவகாமியின் உள்ளுணர்ச்சி கூறியது. எனவே தலை குனிந்தபடி நின்று கொண்டேயிருந்தாள்.

''சிவகாமி! சற்றுத் தலை நிமிர்ந்து, இதோ இந்தக் கத்தியைப் பார்!'' என்றார் மகேந்திர பல்லவர்.

சிவகாமி பார்த்தாள்.

''சற்று முன்னால் இந்தக் கத்தியைப் பற்றி ஒரு விஷயம் சொன்னேனே, அது ஞாபகம் இருக்கிறதா, சிவகாமி!''

''இருக்கிறது, பிரபு!'' என்று சிவகாமியின் உதடுகள் முணுமுணுத்தன. அந்தக் கத்தியானது மாமல்லரின் முதுகிலே பாய்வதற்கு இருந்தது என்ற எண்ணம் அவளைத் துன்புறுத்தியது.

''நான் சொன்னது பொய் சிவகாமி!''

சிவகாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவளுடைய உள்ளம் குழம்பிற்று. அந்தக் குழப்பத்தில் ஆறுதலும் மகிழ்ச்சியும் ஒருவகை ஏமாற்றமும் கலந்திருந்தன. சக்கரவர்த்தி முதலில் எதற்காக அம்மாதிரி பொய்யைச் சொன்னார்; இப்போது எதற்காகத் தாம் பொய் சொன்னதாக ஒப்புக்கொள்ளுகிறார் என்பதொன்றும் புரியாமல் சிவகாமி திகைத்தாள்.


''ஆம், சிவகாமி! உனக்குத் திகைப்பாகத்தான் இருக்கும். உண்மை விவரத்தை உன் தந்தையிடம் சொல்வதற்குக்கூட நான் இஷ்டப்படவில்லை. அதற்காகத்தான் அவரைத் தெப்பத்தைத் தேடுவதற்கென்று அனுப்பினேன். ஆனால், உண்மையான விவரம் உனக்கு மட்டும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும்...''

சிவகாமியின் மனக் குழப்பம் இன்னும் அதிகமாயிற்று. என்ன உண்மையைச் சொல்லப் போகிறார்? அது எதற்காகத் தனக்கு மட்டும் தெரிந்திருக்க வேண்டும் என்கிறார்?

''சிவகாமி! எஃகிலேயே நஞ்சைக் கலந்து செய்த இந்தக் கத்தி, என் ஒரே மகன், மாமல்லனுடைய முதுகிலே பாய்வதற்கு இருந்தது. இந்த அபாயம் யாரால் ஏற்பட்டது தெரியுமா?''

''பிரபு! அது பொய் என்று சொன்னீர்களே!'' என்று சிவகாமி நாக்குழறக் கேட்டாள்.

''எது பொய் என்றேன்? மாமல்லன் முதுகில் கத்தி பாய்வதற்கு இருந்தது பொய் இல்லை, சிவகாமி! பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அந்தப் பெரும் விபத்து நிச்சயமாக வருவதற்கு இருந்தது. அந்த விபத்து உன்னால் தடைப்பட்டது என்றேனே, அதுதான் பொய்! சிவகாமி! நீ கேவலம் சாதாரணப் பெண்களைப் போன்ற கோழை அல்ல; நெஞ்







சுத் துணிவு உள்ளவள். ஆகையால் தான் உன்னிடம் உண்மையைச் சொல்கிறேன்: மாமல்ல பல்லவன் நேற்று இந்த மண்டபப்பட்டுக் கிராமத்திலே இந்த விஷக் கத்தியினால் பின்னாலிருந்து குத்தப்பட்டுச் செத்துப் போயிருக்க வேண்டும். இந்தப் பாறையின் அடியில் இந்த மகிழ மரத்தின் அடியிலேயே அவனுடைய உடல் அநாதைப் பிரேதமாக விழுந்து கிடந்திருக்க வேண்டும். அவ்விதம் நேராமல், அன்றொரு நாள் ஆலகால விஷத்தை உண்டு சகல உலகங்களையும் காத்த பரமசிவன்தான் நேற்றைக்கு மாமல்லனையும், பல்லவ குலத்தையும் காத்து அருளினார்...''

நேற்று மாலை அதே பாறையினடியில் மாமல்லர் உட்கார்ந்து தன் செவிகளில் இணையற்ற காதல் மொழிகளைப் பொழிந்து கொண்டிருந்தார் என் பதைச் சிவகாமி நினைவு கூர்ந்தபோது, அவளுடைய தலை சுழல்வதற்கு ஆரம்பித்தது.

''சிவகாமி, கேள்! வாழையடி வாழையாக வந்த பல்லவ குலத்தில் மாமல்லனைப் போன்ற ஒரு வீர மகன் இதுவரையில் தோன்றியதில்லை. இந்தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யம் இன்றைக்கு மாமல்லனை நம்பியிருப்பது போல் வேறு யாரையும் நம்பியிருந்ததும் இல்லை. அப்படிப்பட்டவன் நேற்றைக்கு இந்தப் பாறையடியில் வஞ்சகமாக நஞ்சு தோய்ந்த கத்தியினால் பின்னாலிருந்து குத்தப்பட்டுச் செத்து விழுந்திருப்பான். தவம் செய்து பெற்ற என் ஏக புதல்வனை நான் இழந்து விட்டிருப்பேன். பல்லவ சாம்ராஜ்யமே நாதியற்ற இராஜ்யமாகப் போயிருக்கும். கவிகளிலும், காவியங்களிலும் புகழ் பெற்ற காஞ்சி சுந்தரி வைதவ்யம் அடைந்திருப்பாள். இந்த விபத்துக்கள் எல்லாம் நேர்வதற்குக் காரணமாயிருந்தது யார் தெரியுமா?...'' என்று சக்கரவர்த்தி நிறுத்தி ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு கூறினார்: ''நான் என் பிராணனுக்கு மேலாகக் கருதி யாரிடம் விசுவாசம் வைத்திருக்கிறேனோ, அந்த ஆயன மகா சிற்பியின் அருமை மகள் சிவகாமிதான்!''

இதைக் கேட்டவுடனே சிவகாமியின் உச்சந்தலையில் பளீரென்று ஒரு மின்னல் பாய்ந்தது. அந்த மின்னலிலிருந்து ஆயிரம் ஆயிரம் ஒளிக் கிரணங்கள் கிளம்பி நாற்புறமும் பாய்ந்தன! (தொடரும்)











தமிழக பலகணி!

தமிழகத்தின் அழகு கொஞ்சும் இடங்களுக்குச் சுற்றுலா செல்வோமா? 1. கொடைக்கானல் ஏரி. 2. உதகமண்டலத்தின் தாவர இயல் தோட்டம். 3. மகாபலிபுரம் கடற்கரைக் கோயில் 4. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம். 5. குற்றாலம் அருவி. 6. புகழ் பெற்ற திருச்சி மலைக் கோட்டை.










மலை ஏறுவோம் மனம் மகிழ்வோம்!




ஊட்டியும், கொடைக்கானலும் விட்டால் வேறு கதி இல்லையா என்று கேட்பவர்கள் சென்னையை விட்டு ஓர் இரவு ரயிலில் பெங்களூருக்குப் புறப் படுங்கள். விடியற்காலை ஆறு மணிக்கு பெங்களூர் ஸிடி ஸ்டேஷனை அடை வீர்கள். அந்த ஸிடி ஸ்டேஷனிலேயே பல்லைத் தேய்த்துக் கொண்டு காப்பி பலகாரம் செய்துவிட்டு எதிரிலுள்ள பஸ் ஸ்டாண்டுக்குச் செல்லுங்கள். எட்டரை மணிக்கு நந்திமலைக்குப் பஸ் புறப்படுகிறது. அதில் ஏறி உட்கார்ந்து விடுங்கள். பத்தரை மணிக்கு நந்தி மலையை அடைந்து விடுவீர்கள். சுக மான மலை வாசஸ்தலம்.

பெங்களூரிலிருந்து முப்பது மைல் தூரத்தில் நந்தி மலை இருக்கிறது.

அந்த மலையில் 4850 அடி உயரத்தில் திப்பு சுல்தான் கோட்டை கட்டினான்.

மலை அடிவாரத்திலிருந்து ஐந்து அல் லது ஆறு மைல் பாம்பு வளைவுப் பாதை யில் பஸ் செல்லுகிறது. மலை ஏறும் போது காணக் கிடைக்கும் காட்சிகள் மிக அருமையாக இருக்கும்.



திப்பு சுல்தான் காலத்தில் கட்டிய கட்டிடங்களே இன்றும் இருக்கின்றன.

மையத்தில் கப்பன் ஹவுஸ் என்ற மாளிகையிருக்கிறது.

இங்கு காந்தி மகான் சிலகாலம் ஒரு கட்டிடத்தில் ஓய்வு எடுத்துக் கொண் டார். அந்தக் கட்டிடத்தை இன்றும் காந்தி நிலையம் என்று அழைக்கிறார்கள்.

மலையில் ஓர் அழகிய சிவன் கோவில் இருக்கிறது.

நந்திமலை என்ற பெயருக்குப் பொருத்தமாக இருக்கட்டும் என்பதற்



காகவே உருவாக்கப்பட்டது போல் மலையின் விளிம்பில் ஏழு எட்டு அடி உயரத்துக்கு ஒரு கருங்கல் நந்தி காட்சி தருகிறது.

அந்த நந்தியை 'நெல்லிக்காய் நந்தி' என்று அழைக்கிறார்கள். ''இதற்கு ஏன் இந்தப் பெயர் வந்தது?'' என்று உள் ளூர்ச் சிறுவனைக் கேட்டேன். அந்த நந்திக்கு எதிரிலிருந்த நெல்லி மரத்தைச் சுட்டிக் காட்டினான்.

மலை முழுதும் பச்சைப் பசேலென்று செடி கொடிகளுடன் நந்தவனமாகக் காட்சியளிக்கிறது. எங்கு பார்த்தாலும் குளிர்ந்த நிழல். கிட்டத்தட்ட 5000 அடி உயரத்தில் இருப்பதால் நல்ல குளிர்கூட.

இந்த அழகிய நந்தவனத்தையும் கட்டி டங்களையும் கர்நாடக அரசாங்கத்தின் நந்தவனத்துறை மேற்பார்வையிடுகிறது.

ஆகவே, யாராகிலும் நந்திமலையில் சிலகாலம் தங்கப் பிரியப்பட்டால் பெங் களூர் கப்பன் பார்க்கில் உள்ள நந்த வனக் கலை இயக்குநருடன் தொடர்பு கொண்டு இடத்தைப் பெற வேண்டும்.

மிக மலிவான வாடகைக்கு — இரண்டரை ரூபாய் முதல் ஏழரை ரூபாய் வரை — அறைகள் வாடகைக்குக் கிடைக்கும்.

மலைமீது சினிமா, நாடகம் போன்ற எவையும் கிடையாது. அமைதி, இயற்கைக் காட்சிகள் இவைதாமுண்டு.

தினம் காலையில் 8—30 மணிக்குப் பெங்களூரிலிருந்து புறப்பட்டு வரும் பஸ், மாலை ஐந்து மணிக்குத் திரும்பி விடுகிறது.

பெங்களூர் போல் அண்மையில் உள்ள ஊர்களிலிருந்தும் வருபவர்கள் வீட்டிலிருந்தே சித்திரான்னங்கள் போன்றவற்றைக் கட்டி எடுத்து வந்து உற்றார் உறவினருடன் குஷாலாக ஒரு நாள் பிக்னிக் அனுபவித்து விட்டுப் போகிறார்கள்.

இங்கு ஒரு ஹோட்டல் உள்ளது. எவ்வித சாப்பாடு ஏற்பாடும் செய்யாமல்



திடீரென்று புறப்பட்டு வருபவர்களுக்கு இந்த ஹோட்டல் அபயம் அளிக்கிறது.

வரும்போதே அரிசி பருப்பு வகைகளுடன் வந்தால்தான் இங்கு சமைத்து உண்ண முடியும். இங்கு வாங்கிக் கொள்ளலாம் என்று நினைத்து வந்தால் பட்டினிதான்.

இடது பக்கம் :

- நந்தி குன்றுகளுக்கு ஏறிச் செல்லும் பாதை - இருபுறமும் மனமோகனமான காட்சிகள்.
- திப்பு கல்தான் கோட்டை வாயில்.
- ஹார்ஸிலி குன்றுகள்.

இங்கே :

- நந்திக் குன்றுகள் என்ற பெயருக்கு ஏற்ப...
- "கப்பன் ஹவுஸ்" - நந்தி ஹில்ஸ்.
- "பிக்னிக்"



நந்தி மலையைப் போலவே, நடுத்தர வகுப்பாருக்கு ஏற்ற மலை வாசஸ்தலம் ஆந்திர மாநிலத்தின் மதனப்பள்ளிக்கு அண்மையில் உள்ள ஹார்ஸிலி மலையாகும்.

சென்னையிலிருந்தும் 250 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சென்னையிலிருந்து சித்தூருக்குப் போய், சித்தூரிலிருந்து மதனபள்ளி சென்று, மதனபள்ளியிலிருந்து ஹார்ஸிலி ஹில்ஸுக்குப் போக வேண்டும். ரயிலில் போவதானால் சென்னை—காட்பாடி—தர்மாவரம் மார்க்கத்தில் பாக்காலாவில் இறங்கிச் செல்ல வேண்டும்.

சமீப காலத்தில் மலை வாசஸ்தலத்துக்குப் போகிறவர்கள் அங்கும் நகர்ப்புறத்து சினிமா நாடகம், கேளிக்கைகள், குதிரைப் பந்தயங்கள், சூதாட்டங்கள் அவ்வளவும் வேண்டும் என்கிறார்கள். இதனால் மலைவாச ஸ்தலத்தின் அமைதி கெடுவதோடு கூட்டம் பெருகி, சுகாதாரத்துக்குக் கேடும் விளைகிறது. உண்

எஸ்.வி.எஸ்.





அடுத்த பூட்ஸ் எப்பொழுது?

வியாபார நிமித்தம் சுந்தரேசன் பல ஊர்களுக்கும் போய் ஹோட்டல்களில் தங்கி வாணிபத்தைக் கவனித்தான். ஒரு தடவை அவனுக்குச் சோதனையாக எந்த ஹோட்டலிலும் இடம் கிடைக்கவில்லை. தியாக விலாஸ் ஹோட்டல் முதலாளி பெரிய மனசு வைத்து அவனுக்கு ஒரு நிபந்தனையின் பேரில் இடம் தந்தார். ''ஒரு பெரிய அறையில் நரம்புத் தளர்ச்சி வியாதிக்காரர் படுத்திருக்கிறார். சத்தம் எழாமல், குறட்டை விட்டு அவர் தூக்கத்தைக் கெடுக்காம லிருந்தால் ஸ்கிரீன் வைத்து அருகிலே தூங்கலாம்'' என்றார்.

சத்தம் செய்யாமல் அறையினுள் நுழைந்தான் சுந்தரேசன். ஆனால் காலிலுள்ள பூட்ஸைக் கழற்றும்போது தவறி ஒரு பூட்ஸ் பொத்தென்று விழுந்து விட்டது! பயந்து போய் மற்ற பூட்ஸைச் சத்தம் செய்யாமல் கழற்றி வைத்து, குறட்டைவிடுவோமோ என்ற பயத்தில் தூங்காமலும் இருந்தான் சுந்தரேசன். நெடு நேரம் கழித்து ஸ்கிரீன் தட்டப்படும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான்.

''ஏனய்யா! ஒரு பூட்ஸைக் கழற்றித் தொப்பென்று போட்டீர்! அடுத்த பூட்ஸை எப்போ கழற்றி எறியப் போகிறீர்? அதை எதிர்பார்த்து நான் தூங்காமலே இருக்கிறேன்!'' என்றார் நரம்புத் தளர்ச்சியுள்ள பெரியவர்!

- சாமா

மையான மலைவாசம் — அமைதியான வாழ்க்கை — விரும்புகிறவர்களை ஹார்ஸிலி ஹில்ஸ் வரவேற்கிறது.

சித்தூர் ஜில்லாவில் உள்ள இந்த மலைக்குப் பூர்வமான பெயர்: ''ஏனுக மல்லம்மா கொண்டா!'' மல்லம்மா என்ற தவக் கோலம் பூண்ட புனிதவதி யிருந்திருக்கிறார். அந்த அம்மையாரை ஒரு யானை பாதுகாத்து வந்ததாம். வேளா வேளைக்கு யானை அந்த அம்மையாருக்கு உணவு கொண்டு வந்து கொடுத்து வந்ததாம். தெலுங்கில் 'கொண்ட' என்றால் மலை. ஏனுக என்றால் யானை. அதிலிருந்து இம்மலைக்கு ஏனுக மல்லம்மா கொண்டா என்ற பெயர் ஏற்பட்டது.

1870ல் கடப்பா ஜில்லாவின் கலெக்டராக இருந்த பிரிட்டிஷ்காரர் டபிள்யூ. டி. ஹார்ஸிலி கடப்பாவின் வெய்யில் கொடுமை தாங்க மாட்டாமல் அண்மையில் குளிர்ச்சியை நல்கும் மலை இருக்கிறதா என்று தேடியிருக்கிறார். கடைசியில் இந்த மலையைத் தேர்ந்தெடுத்து இரண்டு பங்களாக்களைக் கட்டினார். ஒன்றுக்குக் கச்சேரி பங்களா என்று பெயர்; மற்றதற்குப் பால் பங்களா என்று பெயர்.

கச்சேரி பங்களாவில் கோடைக் காலத்தில் கலெக்டர் ஆபீஸ் அலுவல்கள், ஜமாபந்தி போன்றவை நிகழுமாம். 'பால் பங்களா'வில் மலை ஏறி வந்தவர்களுக்கு கலெக்டர் துரை அனுப்புத் தீரப் பால் வழங்க ஏற்பாடு செய்திருந்தாராம். அதனால் அதற்குப் பால் பங்களா என்ற பெயர் வழங்கலாயிற்று. ஹார்ஸிலி உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் பல ஆண்டுகள் இங்கு வசித்துவந்ததாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

இப்பொழுது இந்த மலையில் கவர்னர் மாளிகை உள்ளது. அரசுக் கூட்டுறவுத் துறையும் பலப் பல கட்டிடங்களும், அறைகளும் கட்டி விட்டிருக்கின்றன. இதனை ஒரு நகர்ப்புறமாக வளர்க்கத் திட்டமிட்டு வீடு கட்டிக் கொள்ள விழைபவர்களுக்கு மனைகளும் விற்கப்பட்டிருக்கின்றன.

மிகவும் மலிவான வாடகைக்கு எல்லா வசதிகளும் கொண்ட அறைகளை அரசாங்கம் அளிக்கிறது.

சமுத்திர மட்டத்துக்கு மேல் கிட்டத்தட்ட 4500 அடி உயரத்தில் இருப்பதால் குளிர்ச்சியான, மனத்துக்கு இதமான சீதோஷ்ண நிலை நிலவுகிறது.

இங்கு ஹோட்டல் வசதி கிடையாது. ஆனால் அரசாங்கம் சைவ, அசைவ உணவு வழங்க ஏற்பாடு செய்துள்ளது. முன்கூட்டித் தகவல் தெரிவித்தால் சாப்பாடு வசதி செய்து தருவார்கள்.

ஹார்ஸிலி ஹில்ஸுக்குத் தண்ணீர் பீலேரிஷிவாலி ஊரிலிருந்து வருகிறது. ஆற்றுப் படுகையிலிருந்து ஏழு கட்டங்களில் 'பம்பு' செய்யப்பட்டு வரவேண்டியிருக்கிறது. மேலே ஒரு சுனை இருக்கிறது என்பது வாஸ்தவம். ஆனால் அதனைக் குடிநீராக உபயோகப் படுத்த முடியாது!

ரிஷிவாலியிலிருந்து வரும் தண்ணீர் அருமையாக இருக்கிறது. ஆனால் ஏழு கட்டத்திலுள்ள ஏதாவது ஒரு பம்பு கெட்டுப் போனாலும், மின்சாரத் தடை ஏற்பட்டாலும் மலைமேலிருப்பவர்கள் பாடு திண்டாட்டம்தான். இதை உத்தேசித்து இரவு நேரங்களில் மிக விழிப்புடன் இருந்து மலை மீது தண்ணீர் நிரப்பப்பட்டு விடுகிறது.

ஹார்ஸிலி மலையில் சமீப காலம் வரை திருமலை தேவஸ்தானத்தினர் ஹாஸ்டல் வசதியுடன் கூடிய பள்ளிக்கூடம் நடத்தி வந்தனர். அது இப்போது இயங்கவில்லை. அந்த இடத்தில் டூரிஸ்டுகள் தங்குவதற்காக வசதி செய்யப்பட்டு வருகிறது.

ஆந்திரப் பிரதேச அரசாங்கம் மதனபள்ளிக்கும் ஹார்ஸிலி மலைக்கும் தக்க பஸ் வசதி செய்து கொடுத்தால் அது இன்னும் சிறப்புறும் என்பதில் ஐயமில்லை.

கர்நாடகத்திலும் ஆந்திரப் பிரதேசத்திலுமுள்ள சிறிய மலை வாசஸ்தலங்களைப் பற்றிக் குறிப்பிடுவதோடு நிறுத்திக் கொண்டால் தமிழகத்தில் அத்தகைய இடங்கள் இல்லையா என்ற கேள்வி எழலாம்.

திருப்பத்தூருக்கு அடுத்துள்ள ஏலகிரி மலை அழகிய மலைவாசஸ்தலம். ஆனால் அங்கு பிரயாணிகளாகச் செல்பவர்களுக்குத் தக்க விடுதிகள், அறைகள் இல்லை. இதனைத் தமிழக சுற்றுலாத் துறை தக்கபடி கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

அதே போல் சேலத்துக்கு அண்மையிலுள்ள ஏர்க்காடும் நல்ல இடம். அது ஏற்கெனவே ஓரளவு பிரபலமடைந்து வளம் பெற்ற ஊராகத் திகழ்கிறது.

இவை தவிர இன்னும் சில புது மலை வாசஸ்தலங்களைக் கண்டுபிடித்து மத்தியதர வகுப்பினர் அதிக சிரமமில்லாமல் ஒருவார காலமாகிலும் அமைதியாகத் தங்க வசதி செய்து தருவது சர்க்கார் கடமையாகும்.


Regal elegance for gracious living..
HOTEL SUDARSAN INTERNATIONAL
Tastefully furnished Guest Rooms, Central air conditioning Stereo music.
Under-water illuminated Bhavani Swimming Pool.
Champaka Restaurant with shell decor.
Well stocked and intimate Maya Bar.
Arjuna Health Club.
Beauty Parlour and Gents Hair dressing Salon.
hotel Sudarsan International
12-A, MONTIETH ROAD, EGMORE,
MADRAS-600008.
TELEPHONE: 812061 (4 LINES)
HOTEL SUDARSAN INTERNATIONAL-
A MINI WORLD WITH MAXI COMFORTS.

எண்ணைகள் எல்லாமே எண்ணைகள் தாம்...

ஆனால் ஸிங்கர்* ஆயில்



'மல்டி-ப்ரொடெக்டிவ்' ஆகும்.

நீங்கள்
ஒருமுறை உபயோகித்துப்
பார்த்தீர்களானால் ஸிங்கர்*
ஆயிலின் தனிச்சிறப்பு தெள்ளெனத்
தெரியவரும். இது 'மல்டி-ப்ரொடெக்டிவ்'
(பல்வேறு பாதுகாப்பு தரும்)
எண்ணை. இது உங்கள் மெஷினுக்கு
எண்ணைப் பசை அளித்து, துருப்பிடிக்காமல்
காப்பதோடு, எல்லா உறுப்புகளும் நெடுங்
காலம் சீராக இயங்க உதவுகிறது.
எல்லா இயந்திரங்களின் உறுப்புகளையும் நன்கு
பராமரிக்க எப்பொழுதும் ஆல்-பர்பஸ்
ஸிங்கர்* ஆயிலையே உபயோகியுங்கள்.

இந்தியா முழுவதிலும் கிடைக்கிறது.

0.0852 லிட்டர் ... 4.50

ஸிங்கர் அளிப்பவை சிறந்த பொருட்களே
சிங்கர் சூயிங் மெஷின் கம்பெனி,
207, டி. என். ரோடு, பம்பாய் 400 001

* ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட்மார்க்.

SSM.16.TAM.

பயன் தந்த பயணங்கள்









எஸ். சிவபாத சுந்தரம்.
தி. ஜானகிராமன்.
கலைசாகரம் ராஜகோபால்.
பெ. கோ. சுந்தரராஜன்.

அயராத உழைப்புடன் புனித யாத்திரையை மேற்கொண்டு, ''மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்'' என்ற நூலையும் ''கௌதம புத்தர் அடிச்சுவட்டில்'' என்ற நூலையும் இயற்றித் தந்திருக்கிறார் திரு சொ. சிவபாத சுந்தரம். அவரைச் சந்தித்து, ''தங்களுக்குக் கௌதம புத்தரைப் பற்றி ஒரு பெரிய நூல் எழுத வேண்டும் என்னும் எண்ணம் எப்படி எழுந்தது?'' என்று கேட்டேன்.

''நான் இலங்கையில் பல்லாண்டுகள் வசித்தவன் ஆதலால் எனக்கு என்றைக்குமே புத்த பகவானிடம் ஒரு தனி ஈடுபாடு உண்டு. புத்தரைப் பற்றி விரிவான நூல் ஒன்று தக்க சான்றுகளுடன் எழுதி வெளியிட வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று'' என்றார் அவர். கௌதம புத்தரின் அடிச்சுவட்டைப் பின் பற்றிப் பயணப்பட்ட சிவபாத சுந்தரத்துக்கு வட இந்திய மொழி எதும் தெரியாது. ஆங்கில அறிவு மட்டும் கொண்டு அரும்பாடு பட்டு விஷயங்களைச் சேகரித்தார் தமது நூலுக்கு.

''அதற்கு முன்பு 'மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்' நூலை எழுதத் தோன்றியது எப்படி?''

''என் நினைவைவிட்டு என்றும் அகலாத ஒரு நூல்தான் காரணம். In the steps of my master என்ற நூல். எச். வி. மார்ட்டன் எழுதியது. ஏசுநாதர் அவதரித்த ஜெருஸலம் தொடங்கி எல்லா இடங்களுக்கும் பிரயாணம் செய்து அம்மகானின் வரலாற்றை எழுதியிருக்கிறார்.''

''இதேமாதிரி பிரயாண நூல் இன்னும் ஏதாவது எழுதிக் கொண்டிருக்கிறீர்களா ?''

''சேக்கிழார் அடிச்சுவட்டில்'' என்ற ஓர் ஆராய்ச்சி நூலைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். இதற்காக எண்பத்தைந்து தென்னிந்திய ஆலயங்களைப் பார்வையிட்டேன். எல்லா ஆலயக் குருக்கள்மார்களையும் சந்தித்துப் பேசியிருக்கிறேன்.''

''நடந்தாய் வாழி காவேரி'' என்ற தமிழ் நூலை ஆக்குவதற்கு ஆதார சக்தியாயிருந்த மூவருள் ஒருவரான பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி) அவர்களைச் சந்தித்தேன். அவர், வ. ரா. அவர்களுடன் நெருங்கிப் பழகிய தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களுள் ஒருவர்; நல்ல பல லட்சியச் சிறுகதைகளையும், சிந்திக்க வைக்கும் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். ''சிட்டி'', தி. ஜானகிராமன், ஓவியர் கலா சாகரம் ராஜகோபால் ஆகிய மூவரும் மைசூர் தலைக் காவேரியிலிருந்து தொடங்கி நதிதீரத்தின் வழியாகப் பிரயாணம் செய்தனர்.

'' இந்த நூலை எழுத எத்தனை நாட்கள் பிடித்தன ?''

''சுற்றுப் பயணம் இருபது நாட்களில் முடிந்தது ஆனால் நூலை எழுத ஒரு வருஷமாகி விட்டது ! தி. ஜானகிராமன் நிறையப் புகைப்படங்கள் எடுத்தார். நானும் அவருமே சேர்ந்து குறிப்புக்கள் தயாரித்தோம். ஜானகிராமன் தில்லிக்குப் போக நேர்ந்ததில், குறிப்புக்களை விரிவாக எழுதி நூலாக வெளியிடும் பொறுப்பு என் மீதே சுமந்துவிட்டது.''

'' உங்கள் பிரயாணத்தில் ஏதாவது சுவையான விஷயம்....?''

''நாங்கள் மேற்கொண்ட நதி தீரப் பிரயாணம் முழுவதுமே சுவையானதுதானே !'' என்று கூறிச் 'சிட்டி' அவர்கள் பழைய பிரயாண நினைவின் இன்ப லயிப்பில் ஆழ்ந்துவிட்டார்.

— லோசனன்



மனச்சுவடுகள் மறைவதுண்டோ?

ஒரு நகைச்சுவை நடிகரின் ஹாஸ்ய வெடிக்காகப் பின் வரிசையில் பிறந்த தனிச் சிரிப்பு அவன் கருத்தையும் கழுத்தையும் ஒன்றாகத் திருப்பியது. அவனுக்கு நேர்ப் பின்புறத்தில் மூன்று இளம் பெண்கள் இருந்தனர். இரண்டு 'ஸ்கர்ட்டு'களுக்கு இடையே ஒரு 'லோஹிப்' முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு சிரித்தாள். அந்த முகம் நிமிரும் வரை சங்கர் திரும்பிய வண்ணமே காத்திருந்தான். அவள் நிமிர்ந்தாள். இல்லை ! காலைக் கருக்கலில் ஒரு கமலம் மலர்ந்தது. முற்றிக் கனிந்த ஒட்டு மாங்கனியின் செம்மஞ்சள் முகத்தில் வடுப் பிளவு கண்களின் கரு வண்ணம் காந்தமாய்க் கவர்ந்தது. செக்கச் சிவந்த சின்ன இதழ்கள் மும்தாஜின் மூக்கு. கழுத்தழகைச் சொல்லக் கதாசிரியராலும் முடியாது. அவர்கள்—ஆங்கிலோ இந்தியப் பெண்கள் என்பதை அவர்களது பேச்சுத் தோரணையே சொல்லியது.

படம் முடிந்து சங்கர் வெளியே வந்தான். அவன் கண்கள் அந்தப் பெண்களைத் தேடின. ஆனால் அவர்கள் அவனுக்கு முன்னரே போய்விட்டிருந்தனர்.

நாலைந்து நாட்கள் சென்றன. அவளை அவன் மீண்டும் எதிர்பாராமல் சந்தித்தான். அன்று சங்கர் தன் தமக்கை மகள் நித்யாவைக் கான்வென்டுக்கு அழைத்துப் போக வேண்டி வந்தது. அங்கே செலினை ''இவுங்கதான், எங்க டீச்சர்'' என்று நித்யா அவனுக்கு அறிமுகம் செய்தாள். செலின் சிரித்துக் கொண்டே, ''நித்யா உங்களுக்கு எப்படி வேணும் ?'' என்று அவனைக் கொச்சைத் தமிழில் கேட்டாள். அவன் ஆங்கிலத்தில் பதில் சொல்லிவிட்டு நித்யா எப்படிப் படிக்கிறாள் என்று கேட்டான். ''ஓ! நல்லா வாசிக்கிறாளே!'' என்று நித்யா கன்னத்தில் ஒரு முத்தமிட்டாள். அவன் தன் கிழுதட்டைச் கலைத்துக் கொண்டு விடைபெற்றான்.

அன்றிலிருந்து அவர்கள் இருவரும் மாலை வேளைகளில் சாலையில் சந்தித்துப் புன்னகையையும் பொருள் நிறைந்த பார்வைகளையும் பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

ஒரு நாள் சங்கர் அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அவளைத் தன் வாழ்க்

கைத் துணையாக அடைய அவன் விரும்புவ தாக அதில் எழுதியிருந்தான். ஏனோ அவள் கண்கள் கலங்கின.

அதற்குப் பிறகு அவளுக்கு நான்கு கடிதங்கள் எழுதி அவன் அனுப்பிவிட்டான். ஸெலினிடமிருந்து பதிலேதும் வரவில்லை. தன்னை அவள் விரும்பவில்லையா? பின் கடிதங்களை மட்டும் ஏன் வாங்கிக் கொள் கிறாள்? அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை. இப்படியே பல நாட்கள் சென்றன.

நான் முதன் முதல் சங்கரைச் சந்தித்த அதே தியேட்டரில் அன்று ஸெலின் ராஜு டன் உட்கார்ந்திருந்தாள். திடீரென்று சங்கர் தன் நண்பனுடன் அவளுக்கு முன் வரிசையில் வந்து அமர்ந்ததைக் கண்டு அவள் திடுக்கிட் டாள், இருப்புக் கொள்ளாமல். அதே போல் சங்கர் அவளை ஒரு வாலிபனுடன் பார்த்து விட்டு அதிர்ச்சி அடைந்தான். தன் ஸெலின் வேறு யாரோ ஒருவனுடன் உட்கார்ந்திருப் பதை அவன் மனம் சகிக்கவில்லை. வேர்வை வெள்ளமாய் வழிந்தது.

மறு நாள் காலை அவள் கான்வென்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள். அப்பொழுது திடீரென்று சங்கர் அவளுக்கு முன்னால் சைக் கிளில் வந்து நின்றான். "நேற்று உன்னோடு படம் பார்த்தது யார்?" என்றான். "என் அத்தை மகன் ராஜ்" என்று நிறுத்திக் கொண்டு அவள் ஏதோ ஒன்றைச் சொல்ல முடியாமல் விழுங்கினாள்.

"ஸெலின், நாளை நான் ஒரு இண்டர்வியூ வுக்காகச் சென்னை செல்கிறேன். எனக்கு வேலை கிடைத்து விட்டால் சீக்கிரம் என் வீட்டில் சொல்லி நம் கல்யாணத்தை முடித்துவிடலாம்" என்றான் சங்கர். அவன் போவதாகச் சொன்னது அவளுக்குத் துயரத் தைக் கொடுத்தது. அவன் கண்களிலும் பிரிவுத் துயர் கசிந்து கொண்டிருந்தது.

"கவலைப்படாம போய் வாங்க. என் மனசு என்றைக்கும் உங்ககிட்டேதான் இருக்கும்!" என்றாள் ஸெலின்.

"சத்தியமாக?"

"சத்தியமாக!"

மழை தூறிக் கொண்டிருந்தது. ஒரு கையில் பெட்டியும், மறு கையில் அவளுக் குப் பிடித்தமான கனகாம்பரப் பூவும், கனத்த இதயமுமாகச் சங்கர் வந்தான்.

முன் வாசலில் ஸெலினும் அவள் தங்கை யும் உட்கார்ந்திருந்தனர். அவள் தங்க நிறத்துக்கேற்ற மாம்பழ நிறத்தில் காஞ்சிபுரம் சேலை, அதே வண்ண ஜாக்கெட்.

சங்கர் அவள் வீட்டுக்குப் பக்கவாட்டில் இருந்த அவுட் ஹவுஸை நோக்கி நடந்தான். மழைத் தூறலில் நின்று கொண்டிருந்த அவனை, "வாங்க" என்று சொல்லிக்கொண்டு அவுட் ஹவுஸுக்குள் சென்றாள். சங்கர் பின் தொடர்ந்தான். கையிலிருந்த பூவை அவ ளிடம் நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டு, "ஊருக்குக் கிளம்பிட்டீங்களா?" என்றாள்.

"ஆமாம், ஸெலின்! நான் போய்ட்டு அடுத்த மாதம் வர்றேன். வரும் போது என் அண்ணனிடம் சொல்லி நம் கல்யாணத்துக்கு அவர் சம்மதத்தை வாங்கிக்கிட்டு வர்றேன்"



என்றவன் தொடர்ந்து, "உங்க வீட்டில் நீ ஏதாவது கேட் டாயா?" என்றான்.


"எனக்கு எப்போ சொல்லணும்னு தெரி யும். ஏன் அவசரப்பட றீங்க? எங்க அப்பா படுத்த படுக்கையாக் கிடக்கிறார். இந்த நேரத்திலே நான் இந்த விஷயத்தைச் சொன்னால் அது அவருக்குப் பெரிய 'ஷாக்'காக இருக்குமே!" என்றாள் அவள்.

"நான் உன்னை ஒன்றும் அப்படி அவசரப் படுத்தவில்லை. நீ அதைச் சொல்றப்ப உங்க வீட்டிலே அதுக்குச் சம்மதிக்கலேன்னா நீ என்ன செய்வாய்?" என்றான் சங்கர்.

"அப்படி ஒரு நிலைமை வந்தா, நீங்க எங்க இருக்கீங்களோ அங்கே நான் வந்திடுவேன்!" என்று அவள் சொன்னதும், அந்த அளவுக்கு அவள் தன் மேல் அன்பு வைத்திருப்பதை எண்ணி அவன் நெஞ்சம் விம்மியது.

பிரிய வேண்டிய வேளை வேகமாக நெருங் கிக் கொண்டிருந்தது. அவன் கடைசி முறை யாக அவளைக் கண் கலங்கப் பார்த்துக் கொண்டே தன் பெட்டியைத் திறந்து ஓர் அழகான [illegible] அட் டைஎய

• கௌரி மருது •



''நம் வீட்டுக்கு விருந்தினராக வந்தவர்களுக்கு ஏதேனும் வாங்கித் தரனும்; என்ன வாங்கித் தருவது?''
— '' திரும்பிப் போக உடனே ரயில் டிக்கட் வாங்கிக் கொடுத்து விடுங்களேன் ?''

எடுத்து அவளிடம் நீட்டினான். அதில் அவன் தன் கையாலேயே இப்படித் தீட்டியிருந்தான்:

You are a sweet flower
Born in this world to spread
Your sweetness only to my heart.

அதைப் படித்துவிட்டுத் தேக்கி வைத்த வெள்ளம் கரை புரள்வது போல் ஏனோ அவள் விசும்பினாள்! அவள் கண்ணீரைத் துடைத்து அவள் தளிர்க் கரத்தை எடுத்து மென்மையாக ஒரு முத்தமிட்டுவிட்டுச் சங்கர் பிரிந்தான்.

சென்னைக்கு வந்த சங்கருக்கு விரைவிலேயே வேலை கிடைத்தது. தான் ஸெலினை மணக்க விரும்புவதைத் தன் குடும்பத்தினருக்குத் தெரிவித்து அவர்கள் அனுமதியையும் பெற்றான்.

அவன் எழுதியிருந்த பல கடிதங்களுக்குப் பதிலாக அவள் இரண்டே கடிதங்கள்தான் எழுதி யிருந்தாள். தன் தந்தை தன் திருமணத்தை அடுத்த மாதத்துக்குள் வைத்துவிடவேண்டும் என்கிறார் என்றும், தான் இப்போது முடியாது என்று சொல்லி இருப்பதாகவும், அவர்கள் விஷயத்தை, சாவோடு போராடிக் கொண்டிருக்கும் அவரிடம் எப்படிச் சொல்வது என்ற கவலை தன்னை அரித்துக் கொண்டிருப்பதாகவும் அவள் எழுதி யிருந்தாள்.

அதற்குப் பிறகு அவளிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. அப்பொழுதுதான் அந்தத் தந்தி வந்தது.

''ஸெலின் திருமணம் ! உடன் வரவும் !'' என்று நண்பன் பாலு அடித்திருந்தான். அவன் மனம் அந்தக் கணமே அணு அணுவாய் வெடித்துச் சிதறி, சூன்யமாகி, மீண்டும் அது துகள், துகளாய் ஒன்று சேர்ந்து இறுகியது. சங்கர் உடனே புறப்பட்டுவிட்டான்.

திருமணம் நடக்க விருந்த, ''ஹோலி கிராஸ்'' சர்ச்சுக்குச் சங்கர் வந்தான். மழை தூறிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் ஒரு பச்சை அம்பாஸிடரில் ஸெலின் மணக் கோலத்தில் வந்து இறங்கினாள். அவள் பின்னாலேயே அவள் தந்தையை இரண்டு மூன்று பேர் கைத் தாங்கலாகக் காரிலிருந்து இறக்கினர். அந்தத் திருமணத்துக்காகவே அவர் தம் உயிரை வைத்துக் கொண்டிருப்பவர் போல் இருந்தார்.

ஸெலின் கண்களைச் சந்தித்ததும் சங்கரின் இதயம் ஒரு கணம் துடித்தது. அந்தக் கண்களில் அவள் தன்னிடம் பாவ மன்னிப்புக் கோரும் பாவம் தெரிந்தது. அந்த நிலையிலும் அவன் இலேசாக முறுவலித்தான்.

சங்கர் மணமகனைப் பார்த்தான். அன்றொரு நாள் தியேட்டரில் ஸெலினுடன் சேர்த்துப் பார்த்த அதே ராஜ்தான் இப்பொழுது மணமகனாகப் பெருமிதத்தோடு கோயிலுக்குள் சென்றான்.

ஸெலின், வந்திருந்த விருந்தினர்களை அங்கங்கே பார்த்துப் பேசிக் கொண்டு போனாள். தனியாக நின்ற சங்கரிடம் வந்து தலை குனிந்து நின்றாள். அவன் 'என்ன' என்பது போல் அவளை நோக்கினான்.

'' சங்கர், என்னை மன்னித்து விடுங்கள். நீங்களும் நானும் சந்தித்துக் கொண்டதற்கு முன்பே எனக்கும் ராஜுக்கும் நிச்சயதார்த்தம் செய்திருந்தார்கள். என் மேல் ஆழ்ந்த அன்பு கொண்டிருக்கும் உங்களிடம் அதை எப்படிச் சொல்வது என்றுதான் இந்தக் கடைசி நிமிஷம் வரை நான் இருந்துவிட்டேன். அதே போல் சாகக் கிடக்கும் என் தந்தையிடம் வேற்று மதத்தினரான உங்களை நான் மணக்க விரும்புவதை எப்படி என்னால் வற்புறுத்திக் கூற முடியும்? சொல்லுங்கள் சங்கர்!'' என்று உருகிக் கண்ணீர் மல்கினாள்.

அவன் தனது இடது கையை இலேசாக உயர்த்தி, ''தெட்ஸ் ஆல் ரைட், ஸெலின் ! என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து நான் உனக்கு வழங்கும் ஆசி மலர்கள்! நீ எங்கிருந்தாலும் நல்லா யிருக்கணும்'' என்று குரல் தழுதழுக்கக் கூறி நகர்ந்தான்.

அவனுடைய இதயத்துக்கு மட்டுமே மணம் பரப்ப வந்த மலர் இப்பொழுது அவன் கண்ணுக்கு முன்னாலேயே வேறு ஒருவனுக்கு உரிமையாகும் நிகழ்ச்சி நடந்து முடிந்தது.

மணமக்கள் வெளியே வந்தனர்.

சங்கர் மணமகனை நெருங்கி, ''கன்கிராஜுலேஷன்ஸ் மிஸ்டர் ராஜ் !'' என்று கைகுலுக்கித் தன்னிடமிருந்த ஒரு பார்சலை ஸெலினிடம் கொடுத்துவிட்டு விடைபெற்றான். அவள் அதைப் பிரித்தாள். அது ஒரு வாழ்த்து மடல். சங்கர் தன் கையாலேயே மிக அழகாக எழுதி யிருந்தான்:

You are a sweet flower
Born in this world to spread
Your sweetness only to His Heart.

அவள் கண்களில் நீர் திரையிட்டது. மலர் யாருக்காக மணம் பரப்ப வந்தது? தன்னை மனப்பூர்வமாக நேசிப்பவனுக்காகவா?..... பயிர் செய்து காக்கும் தன் சொந்தக்காரனுக்காகவா? அல்லது அனைத்துக்கும் மூலமான அந்த மகாசக்திக்காகவா? 'ஹிஸ்' என்பது இந்த மூவரில் யாரைக் குறிக்கிறது? அவள் நெஞ்சில் நினைவுகள் கசிந்தன.

சங்கர் மழைத் தூறலில் நடந்து கொண்டே இருந்தான். ஈர மண்ணில் அவன் நடந்து சென்ற காலடிச் சுவடுகளை மழை நீர் அழித்துச் சென்றது. ஆனால் அவள் இதயத்தில் அவன் பதித்துச் சென்ற மனச் சுவடுகளை எதனால் மறைக்க முடியும்?

பாம்பே டையிங்கின் எழில் விளக்கம்

இப்பெண்ணைப் பாருங்கள். பாம்பே டையிங்கின் அற்புதமான பிரிண்டுகளான ஸுப்பர் ஃபைன் பாப்ளின், லான், கெம்ப்ரிக் மற்றும் பாலியெஸ்டர்/காட்டன் ப்ளெண்டுகளில் எவ்வளவு குளுமையாகத் தோற்றமளிக்கிறாள்! கோடையின் வெப்பம் எவ்வளவு கடுமையாக இருப்பினும், இக் குளுமையான பார்வைதான் எவ்வளவு ஆனந்தம் அளிக்கிறது!



சரித்திரம் சொல்லும் பயணங்கள்



கொலம்பஸ்

உலகம் உருண்டையானது என்ற உண்மை அப்போது அறியப்பட்டிருந்தது. எனவே, கிறிஸ்தஃபர் கொலம்பஸ் என்ற இத்தாலியர் மேற்குப் பக்கமாகப் பிரயாணம் செய்து கிழக்குக் கண்டத்தை அடைவதென்று முடிவு செய்தார். அதன்படி பல இன்னல்களுக்கு இடையே கடல் பிரயாணம் செய்து இந்தியாவைக் கண்டதாக நம்பினார். ஆனால் அவர் கண்டதோ வேறு ஒரு புத்தம் புதிய கண்டத்தை. அதுதான் அமெரிக்கா.

தம் கடல் பிரயாணக் கனவை நனவாக்கிக் கொள்ள போர்ச்சுகலின் மன்னர் இரண்டாம் ஜானின் உதவியை நாடினார் கொலம்பஸ். நான்காண்டுகள் காத்திருந்த பிறகு இவரது கருத்தை ஆராய்ந்த அறிஞர் குழு தனது முடிவை மிகச் சுருக்கமாகத் தெரிவித்தது— 'இந்த இத்தாலியன் ஒரு பைத்தியக்காரன்!' இதனால் கொலம்பஸ் மனம் தளரவில்லை. பல நாட்டு மன்னர்களையும் உதவிக்கு அணுகினார். ஆண்டுகள் பல காத்திருந்தார். இந்த நிலையில்ஒருநாள் ஸ்பெயின் அரசி இஸபெல்லாவிடமிருந்து கொலம்பஸுக்கு அழைப்பு வந்தது. சர்வ கலாசாலைப் பேராசிரியர்களின் முடிவை ஒதுக்கிவிட்டுக் கொலம்பஸுக்கு உதவ முன்வந்திருந்தாள் ராணி இஸபெல்லா.

நினா, பிண்டா, சாண்டாமாரியா என்ற மூன்று கப்பல்களை நடத்திச் செல்லும் பொறுப்பைக் கொலம்பஸ் ஏற்றார். பத்து வாரங்கள் அம்மூன்று சிறிய கப்பல்களும் கடலிலேயே மிதந்து கொண்டிருந்தன. ஆரம்பத்தில் உற்சாகமாக இருந்த மாலுமிகள் நம்பிக்கை இழந்து புரட்சி செய்யுமளவுக்கு வெறி கொண்டார்கள். 'இந்த இத்தாலியனைக் கொன்றுவிட்டு நாம் கப்பல்களைத் திருப்பிக் கொண்டு போவோம்' என்னுமளவுக்கு அவர்கள் வெறுப்பும் கோபமும் வளர்ந்தன. வழக்கம்போல் கொலம்பஸ் பொறுமையோடு அவர்களைச் சமாளித்தார்.

''நிலம்! நிலம்!'' என்ற மகிழ்ச்சிக் கூச்சல் ஒருநாள் பிண்டா என்ற கப்பலிலிருந்து கிளம்பியதும் கொலம்பஸ் தம் கப்பல் தளத்திலேயே முழந்தாளிட்டு ஆண்டவனின் கருணைக்காகக் கண்ணீர் வழியப் பிரார்த்தனை செய்தார்.

மார்க்கோபோலோ

இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோபோலோ பரம்பரை வியாபார குடும்பத்தைச் சேர்ந்தவர். பதினேழு வயதுச் சிறுவனாக இருந்தபோது சொந்த நாட்டை விட்டுச் சீனாவரை சென்று, சீன மன்னர் குப்ளேகான் அரண்மனையில் செல்வாக்கு மிக்க விருந்தினராகவும் மந்திரியாகவும் இருந்தார். அச்சமயத்தில் பாரசீக நாட்டு ராணி காலமானார். அவள் சிறுவைச் சேர்ந்த மங்கோலியப் பெண்மணி. தன் இடத்தை மற்றொரு மங்கோலியப் பெண்தான் ஏற்கவேண்டும் என்று பாரசீக மன்னரைக் கேட்டுக் கொண்டாள். அவள் விருப்பத்துக்கு ஏற்பச் சீன மன்னர் குப்ளேகான் கூகாசின் என்ற பதினேழு வயது மங்கையைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார். அவளுக்குத் துணையாகத் தம்முடன் பதினேழு ஆண்டு காலமிருந்த மார்க்கோபோலோவை அனுப்பி வைத்தார். அவர் கடல் மார்க்கமாக சுமத்ரா, ஜாவா தீவுகளையும், இலங்கைத் தீவையும் கடந்து தமிழ் நாட்டில் தூத்துக்குடி முதல் சென்னை மசூலிப்பட்டணம் வரை வந்தார். இவர் இளம் ராணியைப் பாரசீக மன்னரிடம் ஒப்படைத்து விட்டுத் தம் நாட்டுக்குத் திரும்பியதும் உள்நாட்டுக் கலவரத்தில் சிறைப்படுத்தப்பட்டார். சிறையிலிருந்த காலத்தில் தமது பிரயாண அனுபவங்களை விரிவாக ஒரு சகக் கைதிக்குச் சொல்லி எழுதி வைத்தார். அதுதான் ஐரோப்பியர்களுக்கு முதன் முதல் கிழக்கேயுள்ள மாபெரும் சீன சாம்ராஜ்யம், இந்தியா முதலிய நாடுகளைப் பற்றி அறிமுகப்படுத்திய நூலாகும்.

மார்க்கோபோலோ பாரத நாட்டின் தென் பகுதிக்கு வந்ததால் அக்காலத்திய தமிழ் நாட்டைப் பற்றிய வர்ணனைகள் இவரது நூலில் இடம் பெற்று வியப்பளிப்பதுடன் சரித்திர முக்கியத்துவமும் பெறுகின்றன.

வாஸ்கோடகாமா

ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு இந்தியாவுக்குக் கடல் வழி காண முயன்று வெற்றி கண்டவர் வாஸ்கோடகாமா.

கறுப்புத் தாடியும் கட்டமைந்த உடலும் கொண்ட மாலுமி அவர். போர்த்துகீசியர்.

ஆப்பிரிக்காவின் தென் முனையைப் 'புயல் முனை' என்று கருதி மாலுமிகள் அஞ்சினர்கள். பயத்தைப் போக்கி அதை நன்னம்பிக்கை முனையாக மாற்றியவர் வாஸ்கோடகாமா.

இவரது முதல் பயணத்தின்போது ஐந்து மாதங்களுக்கு நிலமே தட்டுப்படவில்லை. ஸ்கர்வி நோயினால் மாலுமிகள் நலிந்தார்கள். பலர் இறந்தும் போனார்கள். உணவுப் பண்டங்களின் கையிருப்பும் குறைந்தது.

அவருடைய உடல் வலிமையும் மனவலிமையும் மாலுமிகளை உற்சாகப்படுத்தின. கள்ளிக்கோட்டைக்கு வந்து நங்கூரமிட்டார் வாஸ்கோடகாமா. அது 1498ம் ஆண்டு.

கள்ளிக்கோட்டை மன்னர் ஜாமரினிடம் வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டு ஏராளமான செல்வங்களுடன் தாய்நாடு திரும்பினார் காமா.

உங்களுக்கு மிகவும் விருப்பமானது இப்போது நிரந்தரமான டப்பாக்களில்!

ஸ்பென்ஸர்ஸ்
ரெட் பாண்ட் அல்லது
கிரீன் லேபல் தேயிலை

அழகான பிளாஸ்டிக் டப்பாக்களில் கிடைக்கிறது.

கவர்ச்சியும் உறுதியும் மிக்க
இந்த டப்பாக்களை நீங்கள்
பல விதங்களில் பயன்படுத்தலாம்.
ஸ்டாக் தீர்வதற்கு முன்
இன்றே முந்துங்கள்.



தற்சமயம்
சென்னையில்
மட்டுமே
கிடைக்கிறது.



ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்

FDS ST 3010 TAM A.

திருமணத்துக்குப் போக ரயிலேறி நடுவழியில் துப்பாக்கியைச் சந்திக்க நேர்ந்தது ஒரு பெண்மணிக்கு. அவள்தான் எத்தனை சமயோசிதத்துடனும், துணிச்சலுடனும் நடந்து கொண்டிருக்கிறாள்!

மத்திய வணிகத் துறை அமைச்சகத்தில் ஓர் அதிகாரியாக ஹாங்காங்கில் பணியாற்றுபவர் திரு சீனிவாசன். சீனிவாசனின் குமாரி சாருவுக்குத் திருமணம் நிச்சயமாகி இவ்வாண்டு மே மாத ஆரம்பத்தில் சென்னையில் நடக்க ஏற்பாடாகியிருந்தது.

ஹாங்காங்கிலிருந்து பத்து நாட்களுக்கு முன்பே தில்லிக்கு வந்துவிட்ட சீனிவாசன், தம் மனைவி, செம்பகம், மூத்த பெண் சாரு, இளைய பெண் ஜெயலட்சுமி ஆகிய மூவருடனும் ஏப்ரல் மாதம் பதினேழாம் தேதி இரவு தில்லியைவிட்டுச் சென்னைக்குப் புறப்பட்டார். சதர்ன் எக்ஸ்பிரஸில், முதல் வகுப்பில் அவர்கள் பிரயாணம் செய்தார்கள். நான்கு பேர்களுக்கான கம்பார்ட்மெண்ட் அது. நான்கைந்து பெட்டிகளுக்கான பொது வராண்டா பாதை!



துப்பாக்கி முனையிலும் துணிச்சல்!

நள்ளிரவு நெருங்கும் வேளை; அடுத்த ஒரு மணி நேரத்தில் வண்டி மதுரா ஸ்டேஷனை அடையும். பெண்கள் இரண்டு பேரும் மேல் பர்த்துகளில் ஏறிப் படுத்துக் கொண்டார்கள். சீனிவாசனும் செம்பகமும் இன்னும் தூங்கவில்லை. ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில் அவர்கள் பெட்டிக் கதவு தட்டப்பட்டது. ஒரு வேளை கண்டக்டர்தான் தட்டியிருப்பார் என்று நினைத்தார்கள். அவரிடம் குடிக்கும் தண்ணீருக்கு ஏற்பாடு செய்யச் சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது. செம்பகம் எழுந்து போய், கதவை வலது கையால் கொஞ்சம் திறந்து வராண்டாவில் எட்டிப் பார்த்தாள்!

அங்கே யாரோ முன்பின் தெரியாத ஆசாமி நின்று கொண்டிருந்தான். அவன் கையில் இருந்த துப்பாக்கி அதே நொடியில் வெடித்தது. அந்தத் துப்பாக்கிக் குண்டு செம்பகத்தின் வலது தோள் பட்டைக்கும் முழங் கைக்கும் இடையே உள்ள சதைப் பகுதியில் புகுந்து சிதறியது.

திருமதி செம்பகத்துக்கு எங்கிருந்துதான் அந்த நேரத்திலும் மனோதிடம் இருந்ததோ! வலது கையில் ரத்தம் கொட்டும் நேரத்திலும் இமைப் பொழுதில் இடது கையால் அந்தக் கதவை இழுத்து மூடிவிட்டாள். அப்புறம் தான் அவள் தொண்டையிலிருந்து பேச்சுவந்தது. அவள் அப்படிக் கதவை இழுத்து மூடியிரா விட்டால் அடுத்த குண்டு உள்ளே யார் மேல் பாய்ந்திருக்கும் என்று சொல்ல முடியாது. சீனிவாசன் 'ஹார்ட் பேஷண்ட்' வேறு! கணவன் பதற்றமடையக் கூடாதே என்று செம்பகம் வேதனையை மறைத்துக் கொண்டாள்.

சீனிவாசனுக்கு என்ன தோன்றியதோ பரபரப்புடன் 'அலாரம் செயினை' இழுத்து விட்டு, மறுபடியும் துணிச்சலுடன் கதவைத் திறந்து வராண்டாவில் எட்டிப் பார்த்தார். அந்த மங்கிய வராண்டா வெளிச்சத்தில் மூன்று பேர் வேகம் குறைந்து வரும் ரயிலிலிருந்து இறங்குவதைக் கவனித்தார். இதற்குள் வண்டி நின்று கூட்டம் சேர்ந்து விட்டது. குமாரி சாரு தன் தாயாருக்கு முதலுதவி செய்ய ஆரம்பித்தார். ரயில் சிப்பந்திகளில் சிலரும் பிரயாணிகள் சிலரும் இறங்கி ரயில் பாதை ஓரமாகவே போய்த் தேடிப் பார்த்தார்கள். ஓடும் வண்டியிலிருந்து குதித்ததில், ஒரு நபர் அங்கேயே அடிபட்டுக் கிடந்தார். துப்பாக்கி ஒன்று பக்கத்தில் உடைந்து கிடந்தது. வேறு இருவரும் பிடிபட்டார்கள். துப்பாக்கியுடன் ரயில் ஏறிய நால்வரில் மூவர் அகப்பட்டு விட்டார்கள்.

வண்டி 'மதுரா' ஸ்டேஷனை அடைந்ததும், சீனிவாசன் குடும்பத்தினர் அங்கே இறங்கி விட்டார்கள். மதுரா ஸ்டே



ஷன்மாஸ்டர் மகத்தான உதவி செய்தார். சிறிது நேரம் கழித்து தில்லி நோக்கிச் செல்லும் எக்ஸ்பிரஸ் வண்டியில் அவர்களுக்கு இட வசதி செய்துகொடுத்துப் புதுதில்லி ஸ்டேஷனில், ஆம்புலன்ஸ் வசதிகளுக்கெல்லாம் டெலிபோன் மூலம் ஏற்பாடு செய்தார். திருமதி செம்பகம் புதுதில்லி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நேராக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். நல்ல வேளையாகக் குண்டு எலும்பை நொறுக்கவில்லை. அந்தக் குண்டின் ஒரு பகுதி உள்ளே உடைந்து சிதறி ஒன்றிரண்டு நரம்புகளைப் பாதித்திருந்தது.

இதனால் குமாரி சாருவின் திருமணம் ஒத்திப் போடப்படவில்லை. சீனிவாசன் குடும்பத்தினர் விமானத்தில் வந்து குறித்த முகூர்த்தத்தில் திருமணத்தைச் சென்னையில் நடத்தி விட்டுப் போனார்கள்.

செம்பகத்தின் சகோதரர் திரு செனம்ய நாராயணன் கூறக் கேட்டு எழுதியவர்:

கோமதி சுவாமிநாதன்

இந்திய ஹோட்டல் சங்கத் தலைவரும் இந்திய சுற்றுலா அபிவிருத்திக் குழுவில் இடம் பெற்று அயல்நாடுகள் பலவற்றுக்குப் பயணப் பட்டவரும் தமிழக சுற்றுலா கௌரவ டைரக்டருமான ஸ்ரீ ஆனந்த ராவ் முக்கியமானதும், ரசமானதுமான தகவல்களைத் தருகிறார்.



● மத்தியப் பிரதேசத்தில் ஒரு வனவிலங்குகள் சரணாலயத்துக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள்.

கற்பகத் தருவாம்......!

"உலகத்திலேயே அதிகமான சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் நாடுகள் எவை? எதனால் அந்தத் தேசங்களுக்குப் பிரயாணிகள் அதிகமாகச் செல்கிறார்கள்?"

"ஸ்பெயின் அதிக பயணிகளை ஈர்க்கும் அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. அதற்கடுத்த படியாக ஜப்பானைச் சொல்லலாம். இவ்விரு தேசங்களிலும் பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்கு நிபுணர்கள் அடங்கிய சுற்றுலா அபிவிருத்திக் குழுக்கள் உள்ளன. இவர்கள் உலகம் முழுவதும் சுற்றி வருகிறார்கள். இவ்விரு நாடுகளின் அரசுகளும் வரிச் சலுகைகள், பிரயாணச் சலுகைகள், வாடகைச் சலுகைகள் என்று சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கப் பல சலுகைகளை வழங்குகின்றன. இவை தவிர அவரவர் வசதிக்கு ஏற்றபடி வாடகை தந்து இருக்க ஏற்றதாகப் பலவித தரமான ஹோட்டல்கள் இந்நாடுகளில் உள்ளன. பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு ஸ்பெயினுக்குப் பயணிகளை அனுப்பி விடுகிறது!"

"இந்த அம்சத்தில் ஜப்பான் எப்படி முன்னணியில் நிற்கிறது?"

"ஜப்பானியர்களின் விருந்தோம்பும் பண்பு சாதாரணச் சுற்றுலாப் பயணிகளிலிருந்து பெரிய பணக்காரர் வரை அனைவரையும் காந்தமாகக் கவர்கிறது. ஜப்பானின் Riyokan விடுதிகள் பிரபல்யமாக விளங்குகின்றன. கம்பளம் விரித்த தரையில் அமர்ந்து உணவு உண்பதும், சாதாரணப் பாயில் படுத்து உறங்குவதும் மேல் நாட்டுப் பயணிகளுக்கு விநோத அனுபவங்கள்!"

"சுற்றுலாத் துறையில் ஹோட்டல் தொழில் பெரும் பங்கு வகிக்கிறதே. சமீப காலத்தில் பல புதிய பிரும்மாண்டமான ஹோட்டல்கள் எழுகின்றனவே, ஏதாவது பலன் உண்டா?"

"இந்திய புகையிலை ஸ்தாபனம், டி.வி.எம். நூனி நிறுவனம் போன்றவையும் இன்று ஹோட்டல் தொழிலில் அடியெடுத்து வைத்திருப்பது புதுமை. சுற்றுலா அபிவிருத்திக்கு 1, 2, 3 நட்சத்திர ஹோட்டல்கள் நிறையத்



திரு ஆனந்த ராவ்

தேவை. பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் மன ருசியை யும் கவனிக்க வேண்டும்; நாவின் ருசியையும் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களின் பாங்க் பாலன்ஸைக் கவனித்தும் செயல்பட வேண்டும்.''

''சுற்றுலாவினால் பெரிதும் பயன் அடைபவர்கள் பணக்காரர்கள் என்ற எண்ணம் நிலவுகிறதே, அதைப் பற்றி....?''

''அது தவறான எண்ணம். போர்ட்டர்கள், டாக்ஸிக் காரர்கள், வழிகாட்டிகள், ஹோட்டல் பணியாளர்கள், ஞாப கார்த்தப் பொருள்களைத் தயாரிப்போர் என்று பல்வேறு தரப் பினரும் சுற்றுலாத் துறையினால் பயனடைகிறார்கள். அதிக பலன் அடைவது நம் சர்க்கார்தான்! அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தரும் காமதேனு இத்துறை.''

''சுற்றுலாப் பயணிகள் என்னென்ன விரும்புகிறார்கள் என்று எப்படித் தீர்மானித்துச் சொல்கிறீர்கள்?''

''ஒரு ஸ்தாபனம் இந்தியாவுக்கு வந்து சென்ற அயல் நாட்டுப் பிரயாணிகளின் மனப் போக்குகளைப் பற்றிப் புள்ளி விவரங்களைச் சேகரித்துள்ளது. இந்தியாவுக்கு விஜயம் செய்த 53 சத விகித அயல் நாட்டுப் பயணிகள் தங்கள் பயணம் திருப்தி கரமாக இருந்தது என்று கூறியிருக்கிறார்கள். இந்திய மக்களின் நட்புறவையும் நல்லெண் ணத்தையும், பண்பாட்டையும் 63.6 சதவிகித அயல் நாட்டார் பாராட்டி யிருக்கிறார்கள். இந்தியத் தயாரிப்புக்களின் சிறப்புக்களை 54 சத விகிதத்தினர் மெச்சியிருக்கிறார்கள். இந்தியாவின் இயற்கைக் காட்சி களைக் கண்டு 48.3 சத விகிதத்தி னர் பூரித்துப் போயிருக்கிறார்கள்; 49 சத விகிதத்தினர் நம் ஏழை மையைக் கண்டு கசந்தாலும் 22 சத விகிதத்தினர் நம் சிவப்பு நாடாக் கொள்கை, விஸாச் சங்கடங்களைக் கண்டு அலுத்துக் கொண்டாலும் பெரும்பான்மையோருக்கு இந்திய விஜயம் மகிழ்ச்சி அளித்திருக்கிறது.''

காமதேனுவாம்!



● பனிச்சரிவில் சறுக்குதல் மேற்கொண்டவர் பலருக்கு விருப் பமான விளையாட்டு - காஷ்மீ ரில் குல்மார்க் பகுதி.



''ஹோட்டல்களில் தங்குவது பற்றி அயல் நாட்டுப் பயணிகளின் நோக்கு எப்படி உள்ளது?''

''43.2 சத விகிதச் சுற்றுலாப் பயணிகள் 'அபாரம்' என்கிறார்கள். 34.3 சதவிகிதத்தினர் 'பரவாயில்லை' என்று கூறுகிறார்கள். 4.4 சத விகிதத்தினர் 'ரொம்பச் சுமார்' என்றிருக்கிறார்கள். 18.1 சத விகிதச் சுற்றுலாப் பயணிகள் எந்த வித அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை.''

''இந்தியச் சுற்றுலா அபிவிருத்திக்குத் தாங்கள் கூறும் யோசனைகள் என்னென்ன?''

''அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளிலிருந்து அதிக அளவு செலவழிக்கக்கூடிய பயணிகள் நீண்ட நாள் தங்கி நம் கலைச் செல்வங்களைக் காண வருகிறார்கள். அவர்கள் தாங்கள் செலவழிக்கும் தொகைக்குரிய வசதிகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்குப் பயணம் திருப்திகரமாக அமைந்தால் மறுபடியும் இங்கு விஜயம் செய்வார்கள். நண்பர்களை அனுப்புவார்கள். புழுதி, குப்பை, துர்நாற்றம், ஏழ்மை இவை தென்படாதபடி இவர்களை நம் கலைச் செல்வங்களைக் காண அழைத்துச் செல்ல வேண்டும். தரத்துக்கேற்றபடி சுற்றுலாப் பயணிகளைத் திருப்திகரமாகக் கவனித்துக் கொண்டால் அவர்கள் வருகை அதிகமாகும். 1978ம் வருஷத்துக்குள் 8,00,000 பயணிகள் வரத் தொடங்கினால் இன்னும் 20,000 ஹோட்டல் அறைகள் தேவை. இதற்கு 263 புதிய திட்டங்களை 120 கோடி ரூபாயில் அமுல்படுத்த வேண்டும். ஹோட்டல் துறையில் எதிர்காலத்தில் 5,40,000 மக்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளது! இப்பொழுது ஹோட்டல் தொழிலில் 1,18,600 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 1800 பேர் பெண்மணிகள்!''

இந்தியாவிலேயுள்ள இமாலயச் சிகரங்களைப்போன்று அயல் நாடுகளில் இருக்கிறதா? மூன்று கடல் சங்கமமாகும் கன்னியாகுமரி போன்று அழகுள்ள இடம் உண்டா? ஈடு இணையற்ற காதல் மாளிகை தாஜ்மகால், சிற்பச் சித்திர விசித்திரங்களில் தேர்ந்த விண்ணை முட்டும் கோயில்கள், வன விலங்கு சரணாலயங்கள், கோவா; கேரளம், மகாபலிபுரக் கடற்கரைகள், அஜந்தா, எல்லோரா, குகைச் சிற்பங்கள் வண்ண ஓவியங்கள், இயற்கை அழகு கொழிக்கும் இடங்கள் அனைத்தும் இந்தியாவிலே கொலுவிருக்கின்றன! நாலு திசைகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய அதிசயங்கள் இந்தியாவில் நிறைய இருக்கின்றன. அவர்கள் தங்கி இருக்கவும் பல இடங்களுக்குச் சென்று வரவும் நல்ல வசதிகள் தேவை. —குன்றுமணி

● பயண இலக்கிய மன்னர்கள்! ●

பயண இலக்கியம் எழுதித் தற்காலத் தமிழுக்கு வளம் சேர்த்தவர்களின் படங்களை இங்கு காண்கிறோம். பேனா மன்னர்களிடையே ஓர் அரசியும் இடம் பெற்றிருப்பது பெண் குலத்துக்குப் பெருமை.



1. அமரர் கல்கி
2. சுந்தரவடிவேலு
3. மு. கருணாநிதி
4. காந்திமதி
5. தேவன்
6. பரணிதரன்
7. சோமலே
8. இ. வா. இ.
9. சோமு
10. மணியன்
11. தமது புகைப்படம் எங்கும் எதிலும் பிரசுரமாவதை விரும்பாத ஏ.கே. செட்டியார்



CMPR-302-303 TAM



"அம்மா... பிஸ்கத்!"

மழலை மொழியும், ஆவல் விழியுமாக அலமாரியை நோக்கிக் கை காட்டினான், ராம்குமார். அங்குதான் — காலி பால் பவுடர் டப்பாவில் பிஸ்கட் வைத்திருந்து, குழந்தை கேட்கும்போதெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுப்பாள், தேவகி.

ஆனால், இப்போது —

"பிஸ்கட் தீர்ந்து விட்டதுடா, கண்ணு. சாயந்திரம் அப்பா ஆபீஸ் முடிந்து வரட்டும், பணம் வாங்கிக் கொண்டு போய்ப் பிஸ்கட் பாக்கெட் வாங்கி வருவேனாம். இந்த ராஜாக் குட்டி ஜோராய் எடுத்துத் தின்பானாம்" என்று செல்லமாக மைந்தனின் கன்னத்தில் தட்டிக் கொடுத்தாள் அவள்.

"பொய் ... பொய்!" ராம்குமார் கோபத்துடன் தேவகியின் கையைத் தட்டி விட்டான். "நேத்தும் இப்படித்தான் சொன்னே..."

"இன்னிக்குக் கட்டாயம் உனக்கு வாங்கித் தர்றேன்டா கண்ணு!"

"மாத்தேன். எனக்கு இப்பவே வேணும்."

"சொல்வதைக் கேளும்மா. என் சமர்த்து இல்லையா?"

ராம்குமார் தேவகியின் கெஞ்சலைக் கொஞ்சம்கூட அங்கீகரிக்கவில்லை. தொடர்ந்து அடம் பிடித்தான். வெளித் திண்ணையில் படுத்திருந்த பாட்டி, "டேய் ராம்! அம்மாவைத் தொந்தரவு பண்ணாமல் இப்படி வாடா!" என்று இரைறலுடன் பேரனை அழைத்தாள். குரல், ஜலதோஷத்தால் கம்மி இருந்தது.

"மாத்தேன்... எனக்குப் பிஸ்கத்துதான் வேணும்" என்று தேவகியின் சேலையைப் பற்றிக் கொண்டு விடாமல் ஆட்டி அடித்தான், ராம்குமார்.



மாதக் கடைசி. வீட்டுச் சாமான்கள் தீர்ந்து போவது இயல்பு என்றாலும், இம்மாதம் என்னவோ தெரியவில்லை. நாலு நாளைக்கு முன்னதாகவே 'பிஸ்கட்' டப்பா காலியாகி விட்டது. ஒரு ரூபாய் இருந்தால் கூடப் போதும்தான்! ஐம்பது அல்லது நூறு கிராம் பிஸ்கட் வாங்கலாம். ஆனால் அந்த ஒற்றை ரூபாய்க்கும் இப்போது வறட்சி. இதொன்றும் அந்த வீட்டுக்கு அநுதாபத்துக்குரிய நிலை அல்ல!

ஏனெனில், தேவகியின் கணவன் சதானந்தம், வீட்டுக்குத் தேவையான அத்தனை சாமான்களையும் மாதக் கணக்கில் வாங்கிப் போட்டு விடுவான். அலுவலகம் போய் வர ரயில் சீசன் டிக்கட். கான்டீன் காப்பிக்கும் சிற்றுண்டிக்கும் மாதாந்திர 'டோக்கன்' புத்தகங்கள் கைவசம் இருந்தன. வேறு எதற்காக வேண்டும் காசு?

கடைசி நாட்களில் ஏதேனும் இப்படி இழுபறியானால், சாமர்த்தியமாய்ச் சமாளிப்பதுதான் தேவகியின் வழக்கம்.

அன்று மாலை.

அலுவல் முடிந்து வந்தான், சதானந்தம். பாண்ட்டை மாற்றிக் கொள்ளும் முன்பு, பர்ஸ், பேனா முதலியவற்றை எடுத்து மாடத்தில் வைத்தான். தேவகி, யதார்த்தமாய் அவனது பர்ஸை எடுத்துப் பிரித்தாள். அதன் 'கண்ணாடி' அறையில் சதானந்தத்தின் புகைப்



படத்துடன் கூடிய அடையாள அட்டையும், சீசன் டிக்கட்டும் இருந்தன. பணம் வைக்கும் பகுதியில் 'வெற்றிடமாகத்தான் இருக்கும்' என எண்ணிக் கொண்டே விரலை விட்டுத் துழாவினாள்.

அதிசயம்! ஒரு ரூபாய் நோட்டு ஒன்று மடிப்புடன் அவளது கையில் வந்தது.

தேவகியின் விழியரும்புகள் புன்னகைத்தன. "ஏது அத்தான், இந்த ஒரு ரூபாய்?"

"எங்கள் ஆபீசர் நாளை முதல் 'காம்ப்' போகிறார். இரண்டாம் தேதியன்று அவரது நண்பர் ஒருவருக்குத் தேவகோட்டையில் திருமணம். அதற்கு வாழ்த்துத் தந்தி அடிக்க வேண்டுமாம். ஒரு ரூபாயைக் கொடுத்து அந்த வேலையை என்னிடம் ஒப்படைத்தார்."

தேவகியின் மனம் ஒரு கணம் பூரிப்பில் ஆழ்ந்தது. 'இந்த ஒரு ரூபாய் இரண்டாம் தேதிதான் தேவைப்படும். இதில் இப்போது ராம்குமாருக்குப் பிஸ்கட் வாங்கிக்கொள்ளலாமே!' என்று யோசித்தாள் அவள். ஆனால் மறு கணமே 'வேண்டாம். நாளை ஒரு நாள் இருக்கிறது, சம்பளம் வர. அதற்கிடையில் வேறு ஏதாவது அத்தியாவசியத் தேவை வந்தால் பணம் வேண்டும்' என்ற எண்ணம் குறுக்கிட்டது. உடனே, ரூபாயைப் பர்சில் திணித்து விட்டு, அடுக்களைக்குள் சென்றாள், காப்பி கலப்பதற்காக.

சதானந்தம், அம்மாவிடம் சென்றான். "ஏன்... ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?"

அத்தை ஒரு கழுத்தறுப்பு!

தமிழினியன்





''ஜலதோஷம், தலைவலி... நீர் நீராய்க் கொட்டுதுடா'' என்றாள் அம்மா.

''மருந்து ஏதும் போட்டுக் கொண்டாயோ?''

''தைலம் வாங்கித் தேய்த்தால் தேவலாம். ம்... மாதக் கடைசி. உன்னிடம் எங்கே பணம் இருக்கப் போகிறது?''

சதானந்தம் ஒரு நிமிஷத்தில் உள்ளே போய்த் திரும்பி, ''இதோ இருக்கிறது ஒரு ரூபாய். போய்த் தைலம் வாங்கிக் கொள், அம்மா'' என்று கொடுத்தான்.

அம்மாவுக்குத் தெரியும், மூலைக் கடையில் விற்கும் டப்பா மருந்து. இதற்கு முன் பல தடவை அவளே போய் அதைக் கேட்டு வாங்கி வந்திருக்கிறாள். அதுபோல் இப்போதும் போய் வாங்கிக் கொள்வாள். இவ்விதம் எண்ணிக் கொண்டே உள்ளே நுழைந்தான், சதானந்தம்.

தேவகி கூடத்தில் நின்றிருந்தாள். கையில் கொதிக்கும் காப்பி டம்ளர். முகமும் அப்படித்தான் இருந்தது. ''உங்களுக்கே இது நியாயமாகத் தெரிகிறதா?'' என்றாள் அவள், படபடப்புடன்.

''எது?''

''ரெண்டு நாளா பிள்ளைக்குப் பிஸ்கட் இல்லை. தினம் தினம் அவனைச் சமாதானப் படுத்துவதற்குள் எனக்கு அலுத்துப் போகிறது. நீங்களானால் அந்த ரூபாயை அம்மாவுக்குத் தானம் பண்ணி விட்டீர்களே!''

மீடறு விழுங்கினான், சதானந்தம். ''தலைவலி என்று...''

''இருக்கட்டுமே! சூடாக ஒரு வாய் காப்பி குடித்தால் சரியாகி விடாதோ?''

காப்பியை ஒரே மடக்கில் ஊற்றிக் கொண்டு வெளியில் கிளம்பினான், அவன்.

ஆனால்—

தேவகிக்கு மனசாகவில்லை. ராம்குமாரைப் பார்க்கப் பார்க்க அத்தையின் மீதான ஆத்திரம் அதிகரித்துக் கொண்டே போயிற்று அவளுக்கு. 'அவர் வரட்டும். இந்தக் கிழடை எப்படியாவது இந்த வீட்டை விட்டுக் காலி பண்ணி விடுகிறேன். இவர் மட்டும்தான் பிள்ளையா? மதுரையில் இவரோட தம்பி இருக்கிறார். மதராசில் அண்ணன், குண்டக்கல்லில் இன்னொரு தம்பி. எங்கேயாவது போய் இருக்கட்டுமே!' தேவகியின் மனம் குரூரமாய்க் கறுவிக்கொண்டிருந்தது. அப்போது—

''தேவகி.. தேவகி...'' வெளியில் யாரோ அவசரமாய்க் கூப்பிட்டார்கள்.

வாசலுக்கு விரைந்தாள் அவள்.

எதிர் வீட்டு மாமி.

''உன் அத்தை சைக்கிளிலே அடிபட்டு விட்டாள். பிள்ளையார் கோவில் கிட்டே ஒரே கூட்டம்.''

சொல்லி வாய் மூடவில்லை.

இரண்டு மூன்று பேர் கைத்தாங்கலாகக் கிழவியை அழைத்து வந்தார்கள். கூடவே சதானந்தமும் வந்தான்.

பயப்படும்படியாக ஏதும் இல்லைதான்.

ஆயினும் வலது முட்டியில் நல்ல சிராய்ப்பு. பெடல் முனை சதையைக் கோதிக் கிழித்து விட்டிருந்தது. சைக்கிள் ஓட்டியிடம் தப்பு இல்லை. மணிச் சத்தம் கேட்டதும் கிழவிதான் நிலை தடுமாறி விழுந்திருக்கிறாள்.

''ஏம்மா... இங்கிருக்கும் மூலைக் கடைக்குத்தானே நீ போனாய்? பிள்ளையார் கோயில் கிட்டே... அவ்வளவு தூரம் போக உனக்கு என்ன வேலை?'' என்றான் சதானந்தம் கோபத்துடன்.

''கோயில் பக்கத்தில் ஒரு பெரிய கடை இருக்குதில்லையா? அங்கே போனேன்...''

''ஏன்?''

''ராம்குமாருக்குப் பிடித்தமான பிஸ்கட் அங்கேதானே கிடைக்கும்?''

கணவன், மனைவி இருவருக்குமே ஒரே திகைப்பு. ''அப்படின்னா... நீ தைலத்துக்காகப் பணம் வாங்கவில்லையா?'' என்றான் சதானந்தம்.

''கோபிச்சுக்காதேடா, சதம்! மூணு நாளா ராம்குமாருக்கு பிஸ்கட் இல்லாமல் தேவகி படும் திண்டாட்டம் உனக்குத் தெரியாது. மாதக் கடைசி. பிஸ்கட் என்றால், சம்பளத்துக்குப் பிறகு வாங்கலாம் என்று ஒத்திப் போடுவாய். ஆனால் .... என் இயலாமையைச் சொன்னால் உனக்கு மறுக்கத் தோன்றாது. அதனால்தான் மருந்துக்கு என்று பணம் கேட்டேன்.''

முக்கிக் கொண்டே தன் மடியை அவிழ்த்தாள், அம்மூதாட்டி. ''இந்தாம்மா தேவகி'' நரம்பெடுத்து நலிந்த கரம் பிஸ்கட் பொட்டலத்தை நீட்டியது.

''அத்தை...'' நாத்தழுதழுக்க அதை வாங்கிக் கொண்டாள் தேவகி. அத்தையைத் தூரத்தத் தான் போட்டு வைத்திருந்த திட்டத்தை நினைத்து மானசீகமாய் அவள் உள்ளம் கண்ணீர் வடித்தது.

44. வெள்ளி நிலவும் கொள்ளை அழகும்!

முழு நிலாவின் அமுதக் கிரணங்கள் தாஜ்மஹாலைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தன. காதல் மாளிகையின் எதிரே இருந்த தடாகம் உருக்கி வார்த்த வெள்ளி போல் தகதகத்துக் கொண்டிருந்தது.

''தலைவனின் காதல் தலைவியின் உள்ளத்தில் பிரதிபலிப்பது போல் தாஜ்மஹாலின் பிரதிபிம்பம் இந்த நீர் நிலையில் தெரிகிறது'' என்றான் மைக்கேல்.

''அப்படியும் சொல்லலாம்; அல்லது மெய்யான காதலைத் தேடு; போலியைக் கண்டு ஏமாறாதே என்று தாஜ்மஹால் எச்சரிப்பதாகவும் கொள்ளலாம்'' என்றாள் அனுபமா.

''அனு! உனக்கு என்ன வந்துவிட்டது என்றே புரியவில்லை. இங்கே வந்தாலாவது நீ கலகலப்பாகப் பழகுவாய்; இந்த உலக மகா அதிசயத்தின் அழகிலே மயங்குவாய்; என் காதலின் அளப்பதற்கு இயலாத பரிமாணங்களைப் புரிந்து கொள்வாய் என்று எண்ணினேன். ஆனால் நீ வழக்கம்போல் தான் இருக்கிறாய்'' என்றான் மைக்கேல் மனத்தாங்கலுடன்.

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. தாஜ்மஹாலின் அழகு எனக்குத் தெளிவு ஏற்படுத்துவதற்குப் பதில் குழப்பத்தை அதிகரித்து விட்டிருக்கிறது.''

''குழப்பமும் தெளிவும் நாமே ஏற்படுத்திக் கொள்வன அனு. நம்முடைய மனத்தை ஆளும் சக்தி நமக்கே இல்லாமல் போவதா? தாஜ்மஹாலின் அழகு இருக்கட்டும்; அதைவிட, அது உருவாகக் காரணமாயிருந்த காதல் அழகானதென்று உனக்குத் தோன்றவில்லையா?''

''ஆமாம்; அவர்களுடைய காதல் அழகானதுதான்'' — அவர்களுடைய என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்துச் சொன்னாள்.

''நீ மனம் வைத்தால் ஷாஜஹான் — மும்தாஜ்மஹாலின் காதலை விடச் சௌந்தரியம் மிக்கதாக நம் காதல் விளங்க முடியும், அனு!'' என்றான் மைக்கேல். அவள் கரங்களை ஆர்வத்துடன் பற்றிக் கொண்டு கேட்டான்: ''அனு! இன்னும் எத்தனை நாட்களுக்கு நான் பொறுமையுடன் காத்திருப்பது?''

''அது நீங்கள் பிரமாதமாய் வர்ணிக்கும் உங்கள் காதலின் தன்மையைப் பொறுத்தது'' என்றாள் அனுபமா.



விண்ணும் மண்ணும்

கி.ராஜேந்திரன்





''அப்படியென்ருல்?''

''அது ஆழ்ந்த காதலா யிருப்பின், எத்தனே ஆண்டுகள் ஆனுலும் பாதகமில்லே என்று காத்திருக்கும் சக்தியை உங்கள் மனம் பெறும். மேம்போக்கான காதலா யிருந்தால் அலுத்துச் சலித்துப் போய் என்னே வெறுத்து ஒதுக்கவும் தோன்றும்.''

''அப்படியானுல் எனக்கு நீ பரீட்சை வைத்திருக்கிருய் என்று அர்த்தமா?''

''இல்லே, இல்லே. பரீட்சை எனக்குத்தான். ஆனுல் நான் ஓர் உதவாக்கரை மாணவி. அனுதாபத்துக்குரியவள். உங்கள் பொறுமையைக் கோருகிறவள்.''

''எனக்குப் புரியவில்லே அனு!'' என்ருன் மைக்கேல். ''ரோமியோவும் ஜூலியட்டும் ஒருவரை யொருவர் அடைய முடியாமல் தவித்தார்கள்; லேலாவும் மஜ்னுவும் அப்படியே துயருற்ருர்கள். இந்தத் துன்பங்கள் எனக்கு அர்த்தமாகின்றன. ஏனென்ருல் அக்காதலர்கள் துயரங்களேத் தாங்களாகவே வருவித்துக் கொள்ளவில்லே. சுற்றுப்புறத்தில் இருந்தவர்கள், சூழ்நிலேகள் அவர்கள் காதலுக்குத் தடையாயிருந்தன. ஆனுல் நம்முடைய நிலே இதற்கு நேர்மாருனது. நாம் இணே சேர்வதை யாரும் தடுக்கப் போவதில்லே. திருமணச் செய்தியைக் கேள்விப்பட்டால் நம் பெற்ருேர்கள் சொல்லி முடியாத சந்தோஷம் அடைவார்கள். அப்படி யிருக்க, உன் மனத்தில் உன்னுலேயே இனம் கண்டுகொள்ள முடியாத ஏதேதோ தடைகளே உருவாக்கிக் கொள்வதும் காலம் கடத்துவதும் எவ்வளவு அபத்தம்? இப்படி ஓர் இரண்டுங்கெட்டான் நிலே நீடிப்பதை விட 'முடியாது' என்று நீ தீர்மானமாகச் சொல்லிவிடுவதே மேல்!'' தன்னிடம் சிறைப்பட்டிருந்த அவளுடைய கரங்களேச் சற்று வேகமாகவே நழுவ விட்டான் மைக்கேல்.

தன் மனம் துணுக்குற்றதை அவள் காட்டிக் கொள்ளாமல் அமைதியாகப் பேசிஞள்: ''நீங்கள் என்னிடம் வெறுப்படைந்து இப்படிச் சொல்லவில்லே; கோபத்தில் வெளிவந்த சொற்கள்தாம். அதனுல் அவற்றை நான் லட்சியம் செய்யப்போவதில்லே. ஒதுக்கித் தள்ளி விடுகிறேன்.''

''ஆமாம் அனு! எனக்குக் கோபம் தான்! நான் ஏன் கோபப்படக்கூடாது? உனக்கு என்ன வயது ஆகிறது?''

வெள்ளியின் * உறுதியோடு நின்ற தாஜ்மஹால், வெள்ளியாகவே நிலவொளியில் ஒளிர்ந்தது போதாதென்று, வெள்ளிக் காசுகள் உதிர்வது போன்ற ஒலியையும் பெற்றது அனுபமா சிரித்த போது!

சிரிப்பு ஓய்ந்ததும் அவள் கூறிஞள்: ''பெண்களின் வயதையும் ஆண்களின் சம்பளத்தையும் கேட்கக் கூடாதென்பது உங்களுக்குத் தெரியாது?''

''ஆமாம் அனு. ஆண்மகனுக்கு ஆரோக்கியம் வயதை நிர்ணயிக்கிறது. பெண்ணுக்கு அழகு வயதை நிர்ணயிக்கிறது என்பார்கள். அது எனக்குத் தெரியும். ஆனுல் பார்ப்பதற்குக் கூட நீ வயதானவளாகத்தான் மாறிக் கொண்டு வருகிருய் என்பது பற்றி யோசித்தாயா? நிலேக்கண்ணுடி முன்னுல் நீ நின்று பார்க்காத நாள் இருக்க முடியாது. நெற்றியின் இரு பக்கங்களிலும் இலேசாக நரை விழுந்திருப்பதை நீ காணவில்லேயா? ஒன்றிரண்டு மயிரிழைகள்தாம். அதற்கு மேல் இல்லே. உன்னிப்பாய்க் கவனித்தால்தான் அதுவும் புலனுகும். ஆயின் உனக்கு எச்சரிக்கை விடுக்க அவையே போதும்!''

அவள் அதிர்ச்சியும் வெட்கமும் அடைந்து தலே குனிந்தாள். எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தும் முடியாமல் விம்மல் ஒலிகள் பீறிட்டுக் கொண்டு எழுந்தன.

அவன் மனம் நெகிழ்ந்து போயிற்று. சட்டென்று அவள் கரங்களேப் பற்றி எடுத்துத் தன் இரு கன்னங்களேயும் அணேத்தாற்போல் வைத்துக் கொண்டான்.

''அனு! தயவுசெய்து என்னே மன்னித்துவிடு. உன்னேத் துன்புறுத்த வேண்டும் என்பது என் நோக்கமல்ல'' என்ருன். பின்னர் இலேசாக அவள் கேசத்தைக் கோதி விட்டபடியே கூறிஞன்: ''உன் கேசம் முழுவதுமே வெள்ளி மயமாய் ஆனுலும் நான் கவலேப் பட மாட்டேன், அனு! அப்போதும் என் காதல் மாருது. அந்நாள் வரும்போதும் உன் கம்பீர அழகிலே நான் கிரங்கிப் போய்த்தான் இருப்பேன். வெள்ளியின் பரிசுத்தம் உன் மனத்தில் இருப்பதை அது எனக்குச் சுட்டிக் காட்டுவதாய்த் தான் அமையும்!''

''உண்மையாகவே என் மனம் வெள்ளி மயமானதுதாஞ என்று புடம் போட்டுப் பார்த்து அதன் பரிசுத்தத்தை நான் சோதித்துக் கொண்டிருப்பதன் அறிகுறிதான் அந்த நரை விழுந்த மயிரிழைகள்; வயது காரணமல்ல.''

''நரை விழுமளவுக்கு உன் மனம் ஏன் அமைதி இழந்து தவிக்க வேண்டும்? என்ன கவலே உனக்கு?''

''உங்கள் காதலுக்கு நான் அருகதை உள்ளவள்தாஞ என்ற பயம். உங்



களுக்குத் திருமண ஆசை காட்டினால் அது உங்களை மோசம் செய்ததாகுமோ என்ற அச்சம். என்னை நானே சரியாகப் புரிந்து கொள்ளாததால் துயரம். இப்படியே நான் காலம் கடத்திக் கொண்டு போவதால் உங்கள் காதலே, அனுதாபத்தை ஏன் நட்பைக் கூட இழந்து விடுவேனோ என்று கவலை!''

''அபத்தமான கவலை; அசட்டுப் பிடிவாதம். உன் மனத்தை உன்னால் புரிந்து கொள்ள முடியா விட்டால் பாதகம் இல்லை. எல்லாப் பொறுப்பையும் என்னிடம் விட்டுவிடு. உன்னை என்னைக் காட்டிலும் நன்றாக யார் புரிந்து கொள்ள முடியும்? நான் உனக்கு எது நல்லது என்று சொல்கிறேனே, அதன்படி கேள். முடிவெடுக்க வேண்டிய பிரச்னை எதுவானாலும் அதை என் தலையில் கட்டிவிட்டு நிம்மதியாய் இரு!''

அவள் மௌனத்தைத் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு அவன் மேலும் தன் கட்சியை வலியுறுத்தினான். பசும் புல் தரையில் தாஜ் மஹாலைப் பார்த்தபடி அமர்ந்திருந்த அவன், அவள் முதுகு தன் மார்பில் பதியுமாறு சாய்த்துக் கொண்டு பேசினான்: ''இந்தியப் பழக்க வழக்கங்களின்படி அல்லாது அமெரிக்க வாழ்க்கை முறைப்படி பார்த்தால் கூட உனக்கு இதற்குள் திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாயாகியும் இருக்கலாம். புனிதமானதும், புல்லரிக்கச் செய்வதும் பரவசத்தில் ஆழ்த்துவதுமான அந்த நாளை ஏன் ஒத்திப் போட்டுக்கொண்டே போகிறாய்?''

ஒரு நெடுமூச்சு பிரிந்தது அனுபமாவின் நெஞ்சிலிருந்து. ஆயின் அவள் இதழ்களிலிருந்து சொற்கள் ஏதும் பிரியவில்லை.

''நமது வாழ்க்கையின் இறுதிக் கட்டம் வரை நமக்குத் துணையிருந்து, நமது இன்ப துன்பங்களை, கவலைகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு ஜீவன் இருக்கிறது என்ற எண்ணம் தரும் நிம்மதி எத்தகையது என்பது பற்றி நீ யோசித்திருக்கிறாயா அனு?''

மௌனமே இதற்கும் பதிலாக இருக்கவே, திடும்மென்று மீண்டும் மைக்கேலுக்குக் கோபம் வந்தது. தன் நெஞ்சின் மீதாகப் படர்ந்திருந்த அந்தத் தளிர்க் கொடியை ஒரு தள்ளுத் தள்ளி விட்டு எழுந்தான்.

''என் தோல் வெளுப்பா யிருப்பது தான் காரணமா சொல்லு! சொல்லிவிடு!'' என்று கூச்சல் போட்டான். ''வெள்ளைத் தோல் படைத்தவர்கள் தான் கறுப்பர்களை வெறுக்க வேண்டுமென்பதில்லையே? கறுப்பும் பழுப்பும் வெண்மையை வெறுப்பதும் சாத்தியம்தானே?'' என்று இரைந்தான்.

அக்கம் பக்கத்தில் நாலு தலைகள் திரும்பிப் பார்ப்பதாக உணரவே அவன் நாணினான். ஆயினும் கோபம் தணியாமல் திரும்பி நடந்து விட்டான். தாயைத் தொடர்ந்து ஓடும் கன்று போல் அவனைத் துரத்திக் கொண்டு வேதனை தாங்காமல் அழுதபடியே விரைந்தாள் அனுபமா.

45. ஆதவன் கோயிலும் ஆபத்தின் தோற்றமும்

அரசாங்கத்தின் பன்னிரண்டு ஆண்டு வருமானத்தைத் தான் எழுப்பிய கோயிலுக்கு நிவேதனம் செய்தான் கங்க மன்னன் நரசிங்கத் தேவன். இன்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இவன் சூரிய பகவானுக்கு எடுப்பித்த கோயில் இன்று கொனாரகாவில் உள்ளது.


பன்னிரண்டாயிரம் சிற்பிகள் பன்னிரண்டு ஆண்டுகள் பாடுபட்டு இதனை உருவாக்கினார்கள். எனவே இந்த ஆதவன் ஆலயம் கலைக் கோயிலாகவும் விளங்குவதில் வியப்பில்லை.

'ஐரோப்பா வளர்த்த எந்தச் சிற்பக் கலையையும் இதைவிடச் சிறந்ததாகக் கருத முடியாது. முடியவே முடியாது!' என்று ஹாவெல் போன்ற மேனாட்டுப் பேரறிஞர்களே ஆணித்தரமாக மொழிந்து போற்றிய இந்த ஆதவனின் ஆலயத்துக்கு அனுபமாவும் மைக்கேலும் வந்து சேர்ந்தார்கள்.

ஆக்ராவை விட்டு அலகாபாத்துக்கும் காசிக்கும் கல்கத்தாவுக்கும் போனவர்கள், பிறகு புவனேசுவரில் ஒரு நவீன வசதியான ஒரு ஹோட்டலில் தங்கினார்கள். ஒரிஸ்ஸாவின் தலைநகரிலேயே உள்ள நுண்ணிய கலை வேலைப்பாடுகளுடன் கூடிய பல கோயில்களை இரண்டு நாட்கள் தங்கி யிருந்து பார்த்து விட்டுத் தற்போது கொனாரகா வந்திருந்தார்கள், ஒரு டாக்ஸியில். அன்று மாலையே புவனேசுவரம் திரும்பி, மறுநாள் சென்னைக்கு விமானம் ஏறுவது என்று ஏற்பாடு.

''மதமாச்சர்யங்களுக்கும் இயற்கையின் சீற்றத்துக்கும் உள்ளாகிச் சிதிலமடைந்திருக்கும் நிலையிலேயே இத்தனை கம்பீரமென்றால் ஒரு காலத்தில் இது

மலர்களிலே அவள் மல்லிகை!



மலர்களின் ராணி, மல்லிகை!
இளமைப் பூங்காவில் பூரிப்புடன்
பூத்துக் குலுங்கும் இந்த
இளமங்கை, அழகு
ராணியாகத் திகழ்கிறாள். அந்த
புத்தெழில் என்றுமே நிலைத்திட
அவள் ஜெய் அழகு சாதன சோப்
உபயோகிக்கிறாள். மல்லிகை மணம்
வீசும் ஜெய் சோப் மேனியை
மிருதுவாக்கி, பொன்னொளி
வீசச் செய்கிறது.

மல்லிகை
மணம் கமழும்
ஜெய்
அழகுசாதன
சோப்

டாடா தயாரிப்பு

OBM.7002 TM


அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்னையைப்போல
மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி
அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில்
ஆழ்த்தும் அருமையான புது நறுமணம்
கொண்டது. அதுவே வெய்ல் ஆஃப் லவ்.
ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத்
தாராளமாக மேனியெங்கும் தூவிக்
கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே
பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம்
நீண்ட நேரம் உங்களைத் தழுவி,
உங்களைச் சுற்றிலும் கமகமவென
வீசிக் கொண்டிருக்கும். வெய்ல்
ஆஃப் லவ் உங்களை அலங்கரிக்-
கட்டும். ஹேலோ மட்டுமே
அளிக்கும் வாசமுள்ள
அன்புத்திரை அது.
ஹேலோ வெய்ல் ஆஃப்
லவ் டால்க் வாசமுள்ள
அன்புத்திரை...
அன்னையைப் போல
மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வெய்ல் ஆஃப் லவ்
டால்க்
NEW
Halo

முழுமை பெற்றுத் திகழ்ந்தபோது என்னமாய் இருந்திருக்கும்!'' என்று வியந்தான் மைக்கேல். ''ஜெயகோஷங்களுக்கிடையில் அரசன் தன் பரிவாரங்களுடன் வருவதையும் அரசிளங்குமரிகள் தங்கள் தோழிகள் புடைசூழ வந்து பூஜித்து விட்டுத் திரும்புவதையும் நடன மாதர்கள் கால்களில் சிலம்புகள் அணிந்து நர்த்தனமாடுவதையும் வாத்தியங்கள் முழங்குவதையும் கீதங்கள் ஒலிப்பதையும் நினைத்துப் பார்! அந்தக் கோலாகலத்தை இப்போது எண்ணினாலும் மெய் சிலிர்க்கிறது இல்லையா?''

''அந்த வர்ணனையுடன் முழு மதியையும் கடற் காற்றையும் அலையோசையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்றாள் அனுபமா. ''ஒரு காலத்தில் இக்கோயில் கடற்கரை ஓரமாகவே இருந்ததாம். பின்னால்தான் கடல் இரண்டு மைல் பின்வாங்கி விட்டது என்கிறார்கள்.''

''சூரிய பகவானின் கோயிலைப் புராணங்கள் வர்ணிக்கும் அவனுடைய இருபத்திநாலு சக்கரத் தேரின் வடிவிலேயே எழுப்ப வேண்டும்; அதனை ஏழு குதிரைகள் இழுத்துப் போவது போல் அமைக்க வேண்டும் என்பது எவ்வளவு அற்புதமான கற்பனை! அந்தத் தேரோடு கதிரவனின் கொலுமண்டபமும், நாட்டிய அரங்கமும்கூட அல்லவா வானவெளியில் மிதந்து சென்று கொண்டிருக்கின்றன!''

''இந்தப் பயணத்தின்போதே அப்ஸர ஸ்திரீகளின் நடனமும் சங்கீதமும் தேவ மாந்தர்களின் உல்லாச சல்லாபமும் நடக்கின்றன! அளவுக்கு மீறியே கூட நடக்கின்றன'' என்றாள் அனுபமா.

''ஆமாம் அனு! சிற்பக் கலையின் சிகரமாகக் கருதப்படுகிற கொனாரகா சூரியன் கோயில், மன்மதக்கலையின் மகோந்நத எழிலையும் சுட்டிக் காட்டத்தான் செய்கிறது. இன்றைய நமது நோக்கில் அது அநாவசியமானதாக, ஆபாசமானதாகக் கூடத் தோன்றலாம். ஆனால் எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சூழ்நிலை, சமூக வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், காரண காரியங்கள் பற்றியெல்லாம் நமக்கென்ன தெரியும்? தெரியாத, தெரிய முடியாத விஷயத்தைக் குறித்து நாம் ஏன் தீர்ப்பு வழங்க வேண்டும்?''

''எல்லா ஜீவராசிகளும் உயிர்த்தெழுவது சூரிய தேவனுடைய அருட்கிரணங்களின் சக்தியால்தான் என்பதால் ஆதவனின் ஆலயத்தில் உயிர் தோற்றத்துக்கு இன்றியமையாத உடலுறவுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கலாம்'' என்றாள் அனுபமா.

அட்டைப்படம்

அமைதி தரும் அருட் புன்னகை



சுற்றுலாவை முன்னிட்டுத் தமிழகத்துக்கு வரும் எவரும் மதுரைக்குச் சென்று திரும்பவில்லையானால் சுற்றுலா முற்றுப்பெற்றதாகாது.

சுற்றுலாச் சிறப்பிதழ் வெளியிடும் தருணத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில், திருப்பணிகளின் இரண்டாவது கட்டம் முடிந்து இருபத்தாறும் தேதி கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற விருக்கிறது.

புன்னகை பூத்த திருமுகத்துடன் அன்னை மீனாட்சியின் எழிற் கோலத்தையும் கோயில் கோபுரத்தையும் இவ்விதழ் மேலட்டையில் வெளியிட்டு வணங்குகிறோம். உலக அமைதிக்கும் நாட்டு நலனுக்கும் அருளுமாறு மீனாட்சி — சுந்தரேசுவரரைப் பிரார்த்திக்கிறோம்.

வண்ணப்படம்: கே. ராமச்சந்திரன்

''அந்த வாதம் நியாயமானது என்றாலும் இந்தியாவில் அநேகமாக எல்லாப் புராதனக் கோயில்களிலுமே இத்தகைய சிற்பங்கள் சில இடம் பெற்றுத்தான் இருக்கின்றன. எனவே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது மையல் கொண்டு மயங்குவது போன்ற சிற்பங்களைப் படைத்தபோதும், சிற்பிகள் அந்தரங்க சுத்தியோடு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதைத்தான். அதை வேடிக்கையாகவோ அலட்சியமாகவோ கருதாமல், கலை உணர்வோடு, கருத்தோடு ஏன், பயபக்தியோடும் கூட இயங்கியிருக்கிறார்கள் என்பதற்கு அந்தச் சிற்பங்களே சான்று பகர்கின்றன. கல்லைக் கனிபோல் கருதிச் சிற்பிகள் எழிற்கோலம் காட்டியுள்ளார்களே, இதே நுணுக்கமான வேலைப்பாட்டை — கடின உழைப்பை— பாலுணர்வு ஊட்டும் சிற்பங்களைப் படைத்தபோதும் காட்டியிருக்கிறார்கள். எனவே அவர்கள் அத்தியாவசியம் என்று கருதிய ஒரு தாத்பர்யம் இதில் அடங்கியிருக்க வேண்டும் என்று நம்பலாம். அது என்ன என்று நமக்குப் புரியாத போது நாம் நீதிபதிகளாக மாற வேண்டியதுமில்லை.''

''யோசிக்க யோசிக்க இந்த நாட்டிலே காணப்படும் முரண்பாடுகள் வியப்பளிப்பனவாக உள்ளன'' என்றாள் அனுபமா. ''வாத்ஸ்யாயனரைத் தோற்றுவித்து, கஜுராஹோவையும் கொனாரகாவையும் படைத்த இந்தியாதான் புலனடக்கத்தின் சிறப்பு பற்றி உலகுக்கே தெரியப்படுத்தியிருக்கிறது. மனத்தை அடக்கி ஆன்மாவை உணர்ந்த ரிஷிபுங்கவர்கள் எத்தனை பேர்! அப்புறம் புத்தரும், சமீப

காலத்தில் பரமஹம்ஸரும் இங்கே தானே தோன்றினார்கள்!''

''இணையற்ற வீரர்கள் அவதரித்த பாரதத்திலேதான் புத்தரும் தோன்றினார். அஹிம்சையைப் போதித்தார். அண்ணல் காந்தியடிகள் சாத்துவீகப் போராட்டத்தில் வல்லரசையே வெல்லலாம் என்று நிரூபித்தார்'' என்றான் மைக்கேல்.

''அணு ஆயுதங்களை விட்டொழிக்குமாறு உலகத் தலைவர்களுக்கு உபதேசிக்க ராஜாஜியை அனுப்பிய அதே இந்தியா அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றல் தனக்குண்டு என்று உலகுக்கு உணர்த்தி யிருக்கிறது.''

''அவ்வளவு ஏன்? உன் மனத்தையே எடுத்துக்கொள்! அதில் இல்லாத முரண்பாடுகளா? என்னை நீ விரும்புகிறாய், நேசிக்கிறாய். என்னோடு சேர்ந்து இருக்கவும் பேசிப் பழகவும் ஒன்றாய்ப் பணியாற்றவும் ஒரே மேஜையில் அமர்ந்து உண்ணவும் ஆசைப்பட்டு என் துணையைச் சதா நாடுகிறாய். என் மனத்தை உன்னைக் காட்டிலும் வேறு யாரும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்க முடியாது என்று மார் தட்டுகிறாய். இவ்வளவுக்குப் பிறகும் என்னை நீ காதலிக்கிறாயா இல்லையா என்பது உனக்கே புரியவில்லை! திருமணத்துக்கு ஒப்ப மறுக்கிறாய்!''

''சுற்றி வளைத்து ஆரம்பித்த இடத்துக்கே வந்து சேர்ந்து விட்டீர்களே!'' என்று அனுபமா கூறிச் சிரித்தாள்.

''இத்தனை முரண்பாடுகள் இந்த நாட்டில் காணப்படுவதற்குக் காரணம் என்ன தெரியுமா? மக்களின் அறிவுதான்! அறிவாளிகள் எதையும் சுலபத்தில் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இன்றைக்குச் சரி என்று தோன்றுவதே நாளை தவறானதாகப் படும்! நீமட்டும் அறிவு பூர்வமாக 'காதல் என்பது என்ன, நான் மைக்கேலிடம் கொண்டிருப்பது காதல்தானா?' என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்துக் கொண்டிராமல் கண்ணை மூடிக் கொண்டு என்னைக் காதலிப்பதாக ஒப்புக் கொண்டுவிடு; பிறகு எந்தவிதமான பிரச்னையும் இராது! மனத் துயரங்கள், கோப தாபங்கள், ஏமாற்றங்கள் எதற்கும் இடமில்லை. எல்லாம் சுலபமாகப் போகும்.''

அவனுடைய இந்தக் கோரிக்கையைத் தன்னால் நிறைவேற்ற முடிகிறதோ இல்லையோ, அவனை விடக் கண்ணியம் மிக்க ஒரு கணவன் தனக்கு நிச்சயமாகக் கிடைக்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. இப்போது இந்தக் கொனரகாவின் சிற்பங்களை ஓர் ஆண் மகனோடு சேர்ந்து இருந்து பார்க்கிறோமே என்பதால் நியாயமாகத் தோன்ற வேண்டிய கன்னச் சிவப்போ அல்லது தலை குனிவோ கூட அவளுக்கு ஏற்படவில்லை என்றால் அதற்குக் காரணம் மைக்கேலின் ஒழுக்கம்தான். இந்தச் சுற்றுலாவின்போது அவள் ஏறத்தாழ அவனுடைய அடைக்கலப் பொருளாகவேதான் இருந்தாள். கண்ணை போல் காத்தானே ஒழிய, அடைக்கலப் பொருளை அடைய அவன் நினைக்கவில்லை. பாரீஸ் நிகழ்ச்சிக்குப் பிறகு அவன் குடிப்பதை ரொம்ப ரொம்பக் குறைத்துக் கொண்டு விட்டான். ஆக்ராவில் ஒரு நாள் தன்னையும் மீறி எழுந்த கோபத்தில் அவளை உதறித் தள்ளியது போல் எழுந்து வந்தானே ஒழிய, காரில் ஏறியதும் ஓர் அண்ணனின் பரிவுடன் அவள் நெற்றியை முத்தமிட்டுக் கண்ணீரைத் துடைத்து விட்டு மன்னிப்பும் கோரினான். கோபம் பறந்ததோ அல்லது அடக்கிக் கொண்டானோ எவ்வாறாயினும் அவன் பழையபடி இனிமையாகவும் பண்புடனும் பேச ஆரம்பித்தான்.

இதனாலெல்லாம் அவனிடம் அவளுக்கு இருந்த மதிப்பு மிகுதியாயிற்று. கூடவே, 'மதிப்பு மிகுவது என்பது காதலாகி விடுமா?' என்றும் அவள் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்!

மைக்கேல் இப்போது கூறியது போல் அதிகமாகச் சிந்திப்பதால்தான் இத்தனை சிக்கல்கள்! எது எப்படியானாலும் ஓர் ஆண்மகனுக்குச் சரியாகப் பதில் சொல்லாமல் காலம் கடத்திக் கொண்டு போய் அவன் பொறுமையைச் சோதிப்பது, துன்புறுத்துவது ரொம்பத் தவறு. சீக்கிரமே தன் முடிவை அவனுக்குத் தெரியப்படுத்தி விடவேண்டும்.

இவ்வாறு எண்ணியபடியே மைக்கேலுடன் பின் ஸீட்டில் அமர்ந்து டாக்ஸியில் அவள் புவனேசுவர் நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தாள்.

பத்தாவது மைலில் டாக்ஸி வழி மறிக்கப்பட்டது! சாலையின் குறுக்கே ஒரு ஜீப் நிறுத்தப் பட்டிருந்தது. அதிலிருந்து இறங்கியவர்களை இருட்டில் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. காரின் முன் விளக்கு வெளிச்சத்தில் அவர்களை இனம் கண்டு கொள்ளலாம் என்றால் அதற்கும் வழியில்லாமல் அவர்கள் நீண்ட கைக்குட்டைகளைக் குறுக்காய் மடித்துக் கண்களுக்குக் கீழே கட்டியிருந்தார்கள்! அவர்களில் சிலரது கரங்களில் துப்பாக்கிகள் பளபளத்தன! (தொடரும்)





சுற்றுப் பயணங்களின்போது சிரிக்கவும் வாய்ப்பிருக்கும்; நெஞ்சைத் தொடும் சம்பவங்களும் நிகழும். பின்னதற்கு எடுத்துக்காட்டான ஓர் உண்மை நிகழ்ச்சியை இங்கு சிறுகதை வடிவில் தருகிறோம்.—ஆர்.

“கூடாது, கூடாது! சேர்த்துக் கொள்ளக் கூடாது!”

“சேர்த்துக் கொண்டால் நீரும் நெருப்பும் நீக்கி வைப்போம்!”

“நல்லது கெட்டதுக்கு நாங்கள் கைகொடுக்க மாட்டோம்.”

“சாதிக் கட்டுப்பாடு செய்து வைப்போம்.”

பெரிய மிராசு என்றுபாராமல் கிராமப் பஞ்சாயத்து அடித்துப் பேசியது.

வடக்கத்திக் கும்பலோடு, முகத் திரை யிட்டு உட்கார்ந்திருந்த ஓர் இளம் பெண்ணின் விசாலமான நயனங்கள் வெறுங் குளம் கட்டவில்லை; காவிரியும் ஆடவில்லை. கங்கையாடின. தமிழ்ப் பேச்சு அந்தப் பெண்ணுக்கு நன்கு விளங்கியதால்தான் இந்த நிலை.

பெரிய மிராசு பரமசிவத்தின் அருகில் நின்று கொண்டிருந்த விசுவேசுவரனுக்குத் தான் விளங்கவில்லை, இந்த இக்கட்டான நிலையில் என்ன முடிவு எடுப்பதென்று!

‘கல்யாணத்தின் பொழுது காசி யாத்திரை போவதாக நாடகமாட வைத்துக் கல்யாணத்தைச் செய்து வைத்தார்களே! நிசமாகவே காசி யாத்திரை போயிருக்கக் கூடாதா? போயிருந்தால் இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்காதே!’

இப்படி எண்ணியவனின் மனத் திரையில்..

பாண்டி ஆடும் ஆறு வயதுச் சிறுமி விசாலாட்சி தன் பெயருக்கேற்ப விசாலமான கண்களைத் திறந்து கொண்டு மகிழ்ச்சியுடன் நின்றாள். கண்களை மூடிக் கொண்டு பாண்டியின் அத்தனை கோடுகளையும் தீண்டாமல் தாண்டித் தாண்டி வந்து அபா

நீரும் நெருப்பும்

ரச் சாதனை புரிந்திருந்தான். அதைக் கண்டு எட்டு வயதுப் பாலகன் விசுவேசுவரன் வியந்து நின்றான்.

அவன் முறை வந்தபோது...?

முதல் கட்டத்திலேயே கோட்டில் காலை வைத்து 'அவுட்' ஆகி விட்டான்.

''எலே, பயலே! இத்தனூண்டு குட்டியிடம் உன் ஆட்டம் பலிக்கலை யேடா!'' என்று பரிகாசம் செய்தார் சுப்புத் தாத்தா.

''இப்படிப் பாண்டிக் கோட்டைத் தாண்டினுளே, இவளை மட்டும் இவன் கல்யாணம் செய்து கொள்ளட்டும், அப்புறம் இவன் கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டாள்!'' என்றாள் குப்புப் பாட்டி.

''போங்கோ, பாட்டி! உங்களுக்கு எப்பப் பார்த்தாலும் பரிகாசம் தான்!'' அத்தனூண்டு குட்டிக்கு எங்கிருந்துதான் அத்தனை நாணம் வந்ததோ?

இப்படித் தாத்தாவும் பாட்டியும் முடி போட்டுப் பெண்ணுக்கு எட்டாவது வயது முடிவதற்குள்ளாக அதே பெண்ணுக்கும் அதே பிள்ளைக்கும் கல்யாணத்தை முடித்து வைத்து விட்டார்கள்.

விசுவேசுவரன் பதினெட்டு வயதுக் காளையானபொழுது, இயற்கை விசாலத்துடன் விளையாடிப் பருவப் பூரிப்பைச் செழிக்க வைத்திருந்தது.

இந்த நிலையில் தான் சுப்புத் தாத்தாவின் மனத்தில் ஓர் ஆசை துளிர்த்தது, குடும்பத்தோடு காசி யாத்திரை போய்வர வேண்டும் என்று!

குடும்பத்தோடு என்றால், அதில் விசுவேசுவரனும் விசாலமும் அடக்கம் தானே? தாத்தாவின் இந்த ஆசை அவர்களுக்குத் தேனிலவாக இனித்தது.

அந்த நாள் சுற்றுலா சிரம சாத்திய மானது. ரயிலையோ பஸ்ஸையோ பார்க்க வேண்டும் என்றால்கூடப் பல காத தூரம் நடக்க வேண்டும், இருந்தாலும் புனித தீர்த்த யாத்திரை என்ற பெயரால், வடக்கையும் தெற்கையும், மேற்கையும் கிழக்கையும் இணைத்துப் பல க்ஷேத்திரங்களைப் படைத்து அவற்றை வாழ்வில் ஒரு தரமாவது தரிசித்து மகிழ வேண்டும் என்று மனிதராகப் பிறந்த ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆசையைக் கிளறிவிட்ட பெருமை பாரதப் பண்பைச் சாரும்.

வழிச் செலவுக்குத் தேவையான மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு பெரிய மிராசு பரமசிவத்

ரா. வீழிநாதன்



நீக்கிவைப்போம்!

தின் குடும்பம் — மூன்று தலைமுறைகளை அழைத்துக் கொண்டு ஊர்வலமாகப் பாரத வலம் வரப் புறப்பட்டது. கிடைத்த இடத்தில் மாட்டு வண்டி, கிடைக்காத இடத்தில் நடை வண்டி என்று சென்னை வந்து சேருவதற்கே ஒரு மாதத்துக்கு மேல் பிடித்தது. அவசரம் இன்றி ஒவ்வோர் இடத்தையும் நன்றாய்ப் பார்த்துக் கொண்டு, நாலு பேரோடு பழகி, அவர்களது இன்ப துன்பங்களைப் பங்கு போட்டுக் கொண்டு சென்றது.

இந்தப் புனித யாத்திரையில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் சோறு கண்ட இடம் சொர்க்கம் என்பது போலப் புனித நதி கண்ட இடத்தில் எல்லாம் நீராடிப் பாவச் சுமையைப் போக்கிக் கொள்ளாமல் மேலே தொடரத் தோன்றுவதில்லை. நர்மதை கிருஷ்ணா, கோதாவரி என்று நீராடிச் சென்ற குடும்பம் ஆக்ராவையும் பார்க்கத் தவறவில்லை. மும்தாஜ் — ஷாஜஹான் காதலையும், மும்தாஜுக்கு நினைவுச் சின்னமாகத் தாஜ் மஹாலைக் கட்டியதையும் அரைகுறைத் தமிழிலும் ஹிந்தியிலும் ஒரு 'வழிகாட்டி விவரித்தபொழுது, சுப்புத் தாத்தாவுக்கு 'நம் தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்று தோன்றியது. குப்புப் பாட்டிக்கோ வேறு ஒரு நினைவு. பொருள் பொதிந்த பார்வையோடு சுப்புத் தாத்தாவைப் பார்த்தாள்.

''என்னடி, என்ன?'' என்றார் சுப்புத் தாத்தா.

''...வந்து... நான் தாலிச் சரட்டோடு மஞ்சளும் குங்குமமுமாகப் போனால்....''

''ஆசையைப் பாரு, ஆசையை! என்னை விட்டுட்டுப் போயிடலாம் என்று நினைக்கிறாயோ? அதுதான் நடக்காது!'' — பயந்தாற் போல் பாட்டியின் கையைப் பற்றிக்கொண்டு வாலிபம் திரும்பியவராக மிடுக்கு நடையே போடலானார் சுப்புத் தாத்தா.

அதைப் பார்த்து விசாலமும் விசுவேசுவரனும் இதழ்களில் புன்னகை இழையோட நின்றனர். இந்தப் பாழும் வெட்கம் தாத்தா பாட்டி அளவுக்கு அவர்களை முன்னேற விடவில்லை.

ஆனால் வடமதுரை சென்று யமுனையில் நீராடியபொழுது யமுனைத் துறைவன் தன் லீலைகளில் ஒன்றைக் காட்டினான்.

''தாத்தா! கருங்கல் படி! வழுக்குகிறது, ஜாக்கிரதை!'' என்றான் விசுவேசுவரன்.

அதைக் கேட்ட விசாலம் பயந்து பயந்து இறங்கினாள். அடுத்த கணம், ''பாட்டி படி நகருகிறதே'' என்று கூவினாள்.

''அடியே, அது ஆமை முதுகாம்!'' பாட்டி சொல்வதற்குமுன்பே வெலவெலத்துப்போனவள் அப்படிய தாலிக் கரம் பற்றியவனின் கழுத்தைக்கெட்டியாகக்கட்டிக்கொண்டாள்.

விசுவேசுவரனுக்கு அப்பொழுது அந்த அணைப்பில் ஏற்பட்ட இன்பம்!

தாத்தா — பாட்டிக்கு வாயெல்லாம் பல்.

இயற்கை அன்னையின் மடியில்தான் என்ன சுகம்! காசி, கயை, பிரயாகை என்று க்ஷேத்திராடனம் போன இளம் தம்பதிகளை நெருக்கமுற வைத்து, அதில் இயற்கையுமே இன்பம் கண்டது!

பிரயாகையில் கங்கை — யமுனைச் சங்கமத்தில் நீராடப் படகில் போனபொழுது...

சுமங்கலிகள் தங்கள் கூந்தலின் நுனியைக் கத்திரித்துப் பண்டாவுக்குத் தானம் செய்வது வழக்கம்.

அந்த வழக்கத்தை மூன்று தலைமுறையினரும் பின்பற்றினர். இதில் விசேஷம் என்னவென்றால், கணவன் மனைவியின் கூந்தலை வகிடு எடுத்து வாரி, ஒற்றைப் பின்னல் போட்டு, குங்குமம் இட்டு, கண்ணாடி காட்டிக் கடைசியில் கூந்தல் நுனியில் கத்திரித்துத் தம்பதியாகத் தானம் செய்ய வேண்டும். இச்செயலில் ஈடுபட்டபோது ரோமாஞ்சனம் ஏற்பட்ட தம்பதிகளில் முதன்மை இடம்பெற்றவர்கள் விசாலம்—விசுவேசுவரன்!

கூந்தல் தானம் பெற்ற பண்டா சொன்னார்: ''மயிர் என்றால் நீரில் மிதக்கத் தானே செய்யும்? இங்கே ஒரு வேடிக்கை பாருங்கள்! இங்கே நீரில் கூந்தல் சுழித்துக் கொண்டு ஆழ்ந்து விடும், கண்களுக்குத் தெரியாமல்!''


அந்தக் காட்சியை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தபொழுதுதான் அந்தத் துர்ச்சம்பவம் நிகழ்ந்தது. படகு ஓர் ஆட்டம் ஆடியது. அந்த ஆட்டத்தில் தடுமாறிய விசாலம் பெருக்கெடுத்தோடும்நீரில் விழுந்துவிட்டாள்!

அல்லோலகல்லோலப்பட்டது சங்கமத்துறை. பேசும் மொழி புரியாமலே உயிர் மொழி புரிந்தவர்கள் பலர் அவளைக் காப்பாற்றிக் கரை சேர்க்க முனைந்தனர். பல மணி நேரம் சல்லடை போட்டுச் சலித்தும் சடலம்கூடக் கிடைக்காமல் திரும்பினர்.

என்னே விதியின் கொடுமை! இந்தப் பயணத்தில் இளம் தம்பதியரை நெருங்கி உறவாட வைத்து இன்பம் சேர்த்த பின் இப்படிக் காலை வாரிவிட்டதே! விசுவேசுவரன் இடிந்து போனான்.

குப்புப் பாட்டியோ, 'காசிக்கு இந்தக் கருமம் தொலைக்கத்தானா வந்தோம்?' என்று புலம்பித் தள்ளி விட்டாள்.

“...மழமழவென்று அழகாகவும் நாகரீகமாகவும் இருக்கவேண்டும்”



“ஃப்ளீட் ஃபவுண்டன் பேனாக்கள்
உங்கள் தேவையறிந்து எழுதுபவை”


- 15 மாடல்களுக்கு மேல் உள்ளன
- 1 ஆண்டுக்குமேல் உழைக்கும் இரிடியம் முனை நிப்புகள்.
- எய்ரோமேட்டிக், வேக்வம், ரெகுலர் நிரப்பல் முறைகள்.
- உற்பத்திப் பழுதுகள் இல்லாமைக்கு உத்தரவாதம்
- எவர் சக்திக்கும் ஏற்ற விலைகள்.

ஃப்ளீட் எழுதும் எழுத்து வெற்றிநடை போடும்


Fleet

வட்டுமுல் இண்டஸ்ட்ரீஸ் பி. லிட்,
டெல்ஸ்டார், 9-9ஏ, எஸ் பாட்கர் மார்க்,
பம்பாய் 400 036,
போன்கள்: 355238/9, 354425


Creative Unit.A 1095



“ரொம்ப விலையுயர்ந்ததோ?”



“இல்லையே, இது கமலா”



சொற்பச் செலவிலே சொகுசான உடுப்பு

கமலா

பாலியெஸ்டர்
இழைகலந்த ஷர்ட்டிங்

CU-A 1332


நம்பகமான, உறுதியான பிடிப்பு
சிக்கனமும்
பாதுகாப்பும்
நிச்சயமாகப் பெற
உங்களுடைய பழைய
தேய்ந்து போன டயர்களை
டிவிஎஸ் மூலம்
ரீடிரெட் செய்யுங்கள்
24 மணி நேரத்தில் ரீடிரெட்
செய்து முடிக்கப்படும்.
டிவிஎஸ்ஸின் பிரத்தியேகத்
தயாரிப்பான 'கேமல் பேக்'
ரப்பரைக் கொண்டு, அது மிகவும்
கரடு முரடான ரோடுகளையும்
சரியாக, உறுதியாகப் பிடித்து
உங்களுக்கு நிச்சயமான பாது
காப்பை அளிக்கிறது.
கார்கள், வியாபாரத்துறை
வாகனங்கள்; இரண்டுசக்கர
வண்டிகள், டிராக்டர்களுக்கு.
TVS
உங்கள்
நம்பிக்கைக்குரியது
டிவிஎஸ்.
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
பெங்களூர் — கோயமுத்தூர் —
கலமசேரி — சென்னை —
மதுரை — மங்களூர் —
புதுக்கோட்டை — சேலம் —
செகந்தராபாத் — திருநெல்வேலி —
விஜயவாடா — விசாகப்பட்டினம்.
SAA/SI/1234

எத்தனையோ இன்னல்களையும் இடர்களையும் தாண்டிப் புனித யாத்திரை மேற்கொண்ட குடும்பத்துக்கு அப்புறம் அந்த யாத்திரை யாத்திரையாக இல்லை. ஊர் வந்து சேர்ந்தால் போதும் என்று ஆயிற்று.

அப்படியே ஊர் வந்து சேர்ந்து ஓராண்டு என்ன, இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.

தாத்தாவும் பாட்டியும் ஏதேதோ குருட்டு யோசனைகள் செய்தனர். தாயும் தந்தையும் அதற்குப் பக்கத் துணை நின்றனர். ஆம், விசுவேசுவரனுக்கு இரண்டாம் கல்யாணம் செய்து வைத்து விடுவது என்பதுதான் அந்த யோசனை. ஊராரும் ஒத்துப் பாடவே, பெண்ணும் பார்த்து விட்டனர். பேசி முடிவு செய்ய வேண்டியதே பாக்கி என்றிருந்த நேரத்தில்தான் கோடைப் பந்தல் போட வேண்டிய காலம் வந்தது. விரகப் பிரவேசத்தை உத்தேசித்துக் கோடைப் பந்தலைப் பெரிதாகவே போட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வடநாட்டுப் பெண்ணைப் போலவே முகத்திரை யிட்டுக்கொண்டு வந்தாள் விசாலாட்சி. அவளை அழைத்து வந்ததும் ஒரு வடக்கத்திக் கும்பல்தான். தன் கரம் பற்றியவனுக்கு இரண்டாம் கல்யாண ஏற்பாடுகள் நடப்பதாக அந்தப் பெண் மனம் உடனே ஊகித்தறிந்துவிட்டது! துடிதுடித்துத் தவித்தது. கண்கள் குளமாகிக் கணப்போதில் அருவியாக மாறின.

தாத்தாவும் பாட்டியும் முகத்தில் சோகம் கப்ப, 'இதென்ன கண்றாவி! பூஜை வேளையில் கரடி நுழைந்த கதையாக' என்று மனத்துள் முணுமுணுத்துக் கொண்டனர்.

இரண்டு ஆண்டுகள் ஊர் பெயர் தெரியாதவர்களோடு இருந்து விட்டு வந்த இவளை எப்படி ஏற்றுக் கொள்வது? ஊர் ஒப்புமா? உலகம்தான் ஒப்புமா? — யார் முகத்திலும் ஈயாடவில்லை.

''எப்படிக் கிடைத்தாள் இவள்?'' குப்புப் பாட்டிதான் கேட்டாள்.

''இந்த விசாலாட்சியை அந்த விசுவேசுவரன்தான் காப்பாற்றினார். அடித்துக் கொண்டு போன கங்கை இவளைக் கரையில் ஒதுக்கி விட்டது. இவள் காவேரிக் கரையில் பிறந்தவள் ஆனதால், நன்றாக நீந்தத் தெரிந்திருக்கிறது. கங்கையோடு போராடியே வெற்றி கண்டிருக்கிறாள். நாங்கள் இவளைக் கண்டெடுத்து முதலுதவி செய்து காப்பாற்றினோம். இவள் மொழி எங்களுக்குத் தெரியாததால், இவள் தங்கியிருக்கும் இடத்தைத் தேடியறிந்து, கொண்டு வந்து சேர்க்க நாட்கள் பல பிடித்துவிட்டன. நாங்கள் வந்தபொழுது நீங்கள் புறப்பட்டு விட்டீர்கள்! புலம்பித் தீர்த்துவிட்டாள், கங்கை விட்டு வைத்த உயிரை இவளே மாய்த்துக் கொண்டு விடுவாளோ என்ற அளவுக்கு! இருந்தாலும் கண்ணிமைபோல் இவளைக் காப்பாற்றினோம். இவள் மொழியை நாங்கள் புரிந்து கொள்ள, எங்கள் மொழியை இவள் புரிந்து கொள்ளப் பல நாட்கள் ஆகிவிட்டன. இந்த அழகிய பெண்ணை நம் தம்பிக்கே மணம் முடித்துக் கொள்ளலாமே என்று எண்ணியபொழுது, இவள் தன் தாலிச் சரட்டை எடுத்துக் காட்டி அதன் பொருளை விளக்கித் தனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்பதைத் தெரிவித்தாள். அப்புறம் உரிய இடத்தில் சேர்க்க வேண்டியதுதானே எங்கள் பொறுப்பு?

''இந்தியாவின் வடகோடியில் இருக்கும் நாங்கள் தென் கோடிக்கு வந்ததற்கு இவள்தான் காரணம். இந்த வீட்டு மருமகள் காணாமற்போய், எங்களிடம் வராவிட்டால் நாங்கள் ராமேசுவர யாத்திரைக்கு வருவது என்பது இலேசில் நடவாத காரியம். இதற்காக அவளுக்கு நன்றி பாராட்டுகிறோம். எங்களுக்கு விடை கொடுங்கள்!''

''நாங்கள் ஏற்க முடியாது. உங்களுடனேயே இட்டுச் செல்லுங்கள் இவளை. இரண்டாண்டுகள் அயலாருடன் இருந்தவளை நாங்கள் எப்படி ஏற்க முடியும்? ஊர் வாய் என்ன சொல்லும்?'' பெரிய மிராசு பரமசிவத்தின் வாயிலிருந்து வந்த சொற்கள் இவை.

''ஆமாம் அம்மா! ஆளுனைப்பட்ட சீதையையே ராமரால் ஏற்க முடியவில்லை. நாங்கள் எம்மாத்திரம்? அதோடு விசுவேசுவரனுக்கு வேறு மணம் செய்து வைக்க நாங்கள் பெண் கூடப் பார்த்திருக்கிறோம்!'' — இது தாத்தா.

இது கேட்டு விக்கித்துப் போய்விட்டாள் விசாலம்.

'' தங்கச்சி ! 'என்னை என் ஊருக்குக் கொண்டு விடு, கொண்டு விடு!' என்று அடம் பிடித்தாயே? இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? எங்களுடனேயே வந்துவிடு. ராமேசுவர யாத்திரையை முடித்துக் கொண்டு கங்கைக் கரைக்கே சென்று வாழ்வோம். உனக்கு ஒரு மாசும் ஏற்படாத வண்ணம் ஆயுள் உள்ளவரையில் காப்போம்!''

''மிகவும் நன்றி அக்கா! பிறந்த மண்ணையும், காவேரி நீரையும் விட்டு விட்டு நான் வர விரும்பவில்லை. எப்படியோ என்னைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போய் வாருங்கள்! சீதைக்கு ராமன் இருக்கும் இடம்தானே அயோத்தி? அதே போல் அவர் என்னை ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் அவர் இருக்கும் ஊரேதான் எனக்குக் கதி!'' கண்ணீருக்கிடையே விசாலம் கூறினாள்.

விசுவேசுவரன் கூறினான்: ''நான் விசாலத்தை நம்புகிறேன். அறியாப் பருவத்தில் என் உள்ளத்தைக் கவர்ந்தவள், அறியும் பருவத்தில் எதுவும் தவறு இழைக்க மாட்டாள். எனக்கு இந்த நம்பிக்கை உண்டு! எனவே, அவளை நான் ஏற்கிறேன்!''

''கூடாது, கூடாது!'' ஊர்ப் பஞ்சாயத்து அடித்துப் பேசியது.

''நீங்கள் நீர் நெருப்புத் தர வேண்டாம்; நல்லது — கெட்டதுக்குக் கைகொடுக்க வேண்டாம். எத்தனைதான் சித்திரவதை செய்தாலும் உங்கள் முடிவை நான் ஏற்கத் தயாராயில்லை!'' என்று அடித்துக் கூறினான் விசுவேசுவரன். பிறகு வடக்கத்தியார்களைப் பார்த்து, ''நானும் விசாலமும் உங்களோடு ராமேசுவர யாத்திரைக்கு வருகிறோம்!'' என்றான்.

''எதற்கடா? ராமநாதன் பிறக்க வேண்டும் என்று ராமநாத ஸ்வாமியை வேண்டிக் கொள்ளத்தானே? கொள்ளுப் பேரனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கும் கொஞ்ச நஞ்சம் இல்லையடா, என்னையும் அழைத்துப் போ!'' என்றாள் குப்புப் பாட்டி.

''ஏண்டி குப்பு! என்னைக் கத்திரிக்கப் பார்க்கிறாயா? அதுதான் நடக்காது!'' என்றார் கப்புத் தாத்தா.

சுபயோக சுப வேளையிலே வடக்கு—தெற்கு என்ற பாகுபாடின்றி இதயம் ஒன்றி ராமேசுவர யாத்திரை தொடர்ந்தது.

What do seven different tyre companies have in common?

M		F		G		
A		I		O	P	
N	**I**	**R**	**C**	**O**	**R**	**D**
S	N	E	E	D	E	U
F	C	S	A	Y	M	N
I	H	T	T	E	I	L
E	E	O		A	E	O
L	K	N		R	R	P
D		E				

That's it. Nircord - India's first nylon tyre cord. Nircord is the super-strengthener for all better-grade tyres made in India today.


nircord®

® Regd. Trade Mark

Nirlon Synthetic Fibres & Chemicals Ltd.

Nirlon House, 254-B, Dr. Annie Besant Road, Bombay-400 025.

Interpub/NIR-C/46A/74



சுற்றுலா
பல்லவர் காலத் திசிறந்தெ நாங்க தான் கைடு.
மழை வரும் போலிருக்கே!
அமுதா குமார்
DIRECTOR



CHAITRA-BLS 8 TAM

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

ஒரு 90-வினாடிக் கண்ணோட்டம்- டிவிஎஸ் அளிக்கும் முழுமையான சேவை



டிவிஎஸ் ஒரு புதிய டிரக்கை உங்களுக்கு விற்பனை செய்கிறது.

அதன் முதலீட்டில் 70 சதவிகிதம் அல்லது அதற்கு மேலும் பெற வழி செய்கிறது.



அதன் பாடியைக் கட்டித் தருகிறது.



அதற்கான பராமரிப்பு சேவையை அளிக்கிறது.

டயர்களை ரீடிரெட் செய்கிறது.



உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

அசல் மாற்றுப் பகுதிகள் பல டிவிஎஸ் அலுவலகங்களிலும், ஏராளமான விற்பனை/பணி நிலையங்களிலும் கிடைக்கின்றன.

டி.வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை.

SAA/TVS/1036

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)